# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்
ஆசிரியர்: ஆ.செல்வம்
ஜனவரி - 2024
தனிப்பிரதி ரூ.20











## ஜாக்டோ - ஜியோ
# கோட்டை முற்றுகை

28.12.2023

# ஜாக்டோ – ஜியோ (JACTTO - GEO)

Joint Action Council of Tamilnadu Teachers Organisation and Government Employees Organisation

# பிப்ரவரி 26 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம்

1.22.01.2024 முதல் 24.01.2024 முடிய மூன்று நாட்கள் மாநிலம் முழுவதும் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர், அரசு ஊழியர் சந்திப்புப் பிரச்சார இயக்கம் நடத்துவது.

2. 30.01.2024 அன்று மாவட்டத் தலைநகரங்களில் மறியல் போராட்டம் நடத்துவது.

3. 05.02.2024 முதல் 09.02.2024 முடிய அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கோருவது (பி.ஜே.பி., அ.தி.மு.க. தவிர்த்து).

4. 10.02.2024 அன்று மாவட்ட அளவில் வேலை நிறுத்த போராட்ட ஆயத்த மாநாடு நடத்துவது.

5. 15.02.2024 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது.

6. 26.02.2024 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது.

# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2024 ஜனவரி**

**மலர்:45** **இதழ்:01**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

**வரைகலை: கார்ட்டூன்வாசி**

**இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178**

**இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி**

**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.200**
**தனி இதழ் : ரூ.20**



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனாங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **தொடர்வோம் நம் போராட்டங்களை திட நெஞ்சோடு, தீர்க்கமான முடிவோடு!** தலைவர் மடல் ............................4
2. **புத்தாண்டில் சபதமேற்போம்!** பொதுச் செயலாளர் மேசையிலிருந்து.............................8
3. **கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் எழுச்சிமிகு பவளவிழா ஆண்டு ஐந்தாவது மாநில மாநாடு!** ............................12
4. **அரசியல் உணர்வு இல்லாதவர்களா இளைய தலைமுறை!!**.......................13
5. **ஆசிரியர் - அரசு ஊழியர், அரசுப் பணியாளர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகள்**...............14
6. **கியூப விடுதலையின் புரட்சிக் கவிஞர் ஒசே மார்த்தி**............15
7. **சங்கம் கடந்து வந்த பாதை** ..............17
8. **சொல்லத்தான் நினைக்கிறேன்** ...........18
9. **மௌனம் கலையட்டும்; சொன்ன சொல் பலிக்கட்டும்; கோரிக்கைகள் நிறைவேறட்டும் மாண்புமிகு முதல்வரே!**.....................19
10. **குடிமக்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்** .........................22
11. **நீங்கள் கலகக்காரர்கள்... எப்போதும் கலகம் செய்யுங்கள் -பிடல் காஸ்ட்ரோ**..........................23
12. **சிஏஜி அறிக்கைகள் 2010-2023 ஒரு பார்வை** ..............................26
13. **புத்தக வாசிப்பு: வரலாற்றை புரட்டிப் போடும்!**...........28
14. **விவசாயிகளின் மனங்களில் வாழ்கிறார் எம்.எஸ்.சுவாமிநாதன்**......................30
15. **ஜம்மு - காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து பறிப்பை நியாயப்படுத்திய உச்சநீதிமன்றத் தீர்ப்பு** ....................32

# தொடர்வோம் நம் போராட்டங்களை திட நெஞ்சோடு, தீர்க்கமான முடிவோடு!

நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசின் 9 ஆண்டு கால ஆட்சியில் மக்களுக்கு விரோதமாக, தொழிலாளர்களுக்கு விரோதமாக, விவசாயிகளுக்கு விரோதமாக - என அனைத்து பகுதியினரையும் பாதிக்கும் வகையில் பல்வேறு நவீன பொருளாதார கொள்கைகள் அமலாக்கப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில் இந்திய பெருமுதலாளிகள், பன்னாட்டு கார்ப்பரேட்டுகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களையும், செல்வங்களையும் வாரிக்கொடுத்துக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் பாஜக-வுக்கு இருக்கும் அதீத பெரும்பான்மை பலத்தை பயன்படுத்தி விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதிக்கும் மூன்று சட்டங்களை, எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்களையும் மீறி கொண்டு வந்தது. தொழிலாளர்களின் உரிமைகள், நலனை பாதுகாக்கும் அரணாக இருந்த 26 சட்டங்களை, முதலாளிகளுக்கு சாதகமான 4 சட்டத் தொகுப்புகளாக மாற்றி கொண்டு வந்தது. மின்சார சட்டத் திருத்தம், வனப் பாதுகாப்பு சட்டம், கடற்கரை மேலாண்மைச் சட்டம், மோட்டார் வாகனச் சட்டத்திருத்தம், பணமாக்கல் திட்டம், பணமதிப்பு நீக்கத் திட்டம், சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம், நாட்டின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்களை கம்பெனிகளாக மாற்றியது, ராணுவத்திற்கு அக்னிபாத் என்ற பெயரில் குறிப்பிட்ட கால வேலைமுறையில் இளைஞர்களின் வேலை மற்றும் சமூக பாதுகாப்பை பறித்தது; கல்வி, மருத்துவம், ஊட்டச்சத்து உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்தது, கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கான நிதியை வெட்டியது என பல விதமான தாக்குதல்களை இந்திய மக்கள் மீதும், உழைக்கும் மக்கள் மீதும் நடத்தி வருகிறது.

கொரோனா தொற்றுக்குப் பின் இந்தியாவில் மாத ஊதியம் பெறும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் கணிசமான எண்ணிக்கையில் அனைத்துவிதமான சமுகப்பாதுகாப்பு திட்டங்களிலிருந்தும் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்ற அதிர்ச்சிகரமான விபரங்கள் வெளியாகியுள்ளன. உத்தரவாதமான வேலைகளில் இருப்பதாக கருதப்படும் ஊழியர்களில் 54 சதவீதம் பேர் எந்த சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழும் தற்போது இல்லை. 2019-20ல் கொரோனாவுக்கு முன்பு 23 சதவீதம் ஊழியர்களுக்கு உறுதி செய்யப்பட்டிருந்த சமூகப் பாதுகாப்பு பலன்கள் 2022-23ல் 21 சதவீதமாக குறைந்துள்ளது.

தனது தலைமையின் கீழ் நாடு மிகப்பெரும் பொருளாதார வளர்ச்சியை எட்டிவிட்டதாக பிரதமர் மோடி இடைவிடாமல் ஒரே பல்லவியை பாடி வருகிறார். முற்றிலும் திரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை அவரும், அவரது ஊதுகுழல்களும் பரப்பி வருகிறார்கள். ஆனால் பேரழிவு மிக்க ஒன்றிய அரசின் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மிகவும் துயரம் தரத்தக்கவை. உதாரணத்திற்கு 2023 மார்ச் மாதத்தில் மட்டும் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பிரச்னைகளை காட்டும் ஏப்ரல் மாதம் வெளியான இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (சிஇஎம்ஐ) தரவுகளைப் பார்ப்போமானால் வேலையின்மை விகிதம் 7.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 39.8 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. வேலையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 36.7 சதவீதமாக குறைந்துள்ளது. இது 2023 துவக்கத்தில் இருந்த நிலையை விட

தற்போது நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதை தெளிவாகக் காட்டுகிறது. இந்தியாவை அதிவேக தொழில்மய நாடாக மாற்றிவிட்டோம் என்று மார்தட்டிக் கொள்கிறது ஒன்றிய அரசு. ஆனால் கடந்த கடந்த ஆண்டுகளில் இந்தியாவின் விவசாய நிலங்களில் வேளாண் கூலித்தொழித் தொழிலாளர்களின் எண்ணிக்கை 6 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. பிரதமர் மோடியின் பொருளாதாரக் கொள்கை வேலைவாய்ப்பற்ற வளர்ச்சியை உண்டாக்கியுள்ளது. அதேசமயம் அவரின் கார்ப்பரேட் நண்பர்களுக்கு மிகப்பெரிய லாபங்களை பரிசாக வாரி வழங்கியுள்ளது. இதன் விளைவால் இந்தியா தொழில் மய சூழலிலிருந்து விலகிச் சென்றுள்ளது. 20 ஆண்டுகளுக்கு முன்பு தொழில் உற்பத்தி துறையின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17 சதவீதமாக இருந்தது தற்போது (2022ல்) 13 சதவீதமாக வீழ்ந்துள்ளது. இதுதான் பிரதமர் மோடி கூறும் தொழில் வளர்ச்சியின் லட்சணம்.

இதுபோன்று முதன்மையான பொதுத்துறை நிறுவனங்களையெல்லாம் மோடி அரசாங்கம் சீர்குலைத்து வருகிறது. நாட்டின் முதன்மையான நவரத்னா நிறுவனங்களில் ஒன்றான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ஓஎன்ஜிசி) நடப்பு நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் 20 சதவீதம் லாபத்தில் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இந்நிறுவனத்தின் நிகரலாபம் சென்ற நிதியாண்டின் இதே காலகட்டத்தில் இதன் நிகரலாபம் ரூ.12,826 கோடியில் இருந்தது. இப்போது ரூ.10,216 கோடியாக குறைந்துள்ளது. மக்களின் சொத்துக்களான இந்நிறுவனங்களின் லாபங்களும் வளங்களும் ஒன்றிய ஆட்சியாளர்களின் கூட்டுக்களவாணிகளது நிறுவனங்களுக்கு மடைமாற்றம் செய்யப்படுகின்றன.

18 மாதங்களில் இல்லாத அளவிற்கு இந்தியாவின் உற்பத்தி துறைகளின் உற்பத்தி, டிசம்பர் 2023ல் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த மூன்றரை ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பொருட்கள் உற்பத்திக்கான மூலப்பொருட்களின் விலைகளும் கடுமையாக அதிகரித்துள்ளதாக தொழிற்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் பிரதமரோ மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவுக்கு அதிகமாக அதிகரிக்கும் என முற்றிலும் பொய்யான விபரங்களை முன் வைத்து வழக்கமான படாடோப பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். ஆனால் தொழிற்சாலைகளில் உற்பத்தி என்பது பொருளாதார மீட்சி வெகுதூரத்தில் உள்ளது என்பதையே காட்டுகிறது.

மோடி அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவில் நுகர்வோர் செலவினம் குறைந்திருக்கிறது. நுகர்வு பொருட்கள் விலையேற்றம், பணமதிப்பிழப்பு நடவடிக்கை, தெளிவில்லாத ஜிஎஸ்டி வரிவிதிப்பு போன்றவற்றின் காரணமாக சிறுகுறுதொழில்கள் முடங்கிப்போய் மக்களின் வாங்கும் சக்தி குறைந்து நடுத்தர மற்றும் ஏழை இந்தியர்கள் தங்கள் உணவை குறைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கிராமப்புற நுகர்வு அதிவேகமாக சரிந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் உணவுப் பொருட்கள் விலை உயர்வினால் மாத சில்லரை பணவீக்கம் அதிகரித்துள்ளது காய்கறிகள், பழங்கள், பருப்பு வகைகள், முட்டை, இறைச்சி போன்றவற்றின் விலை நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே செல்கிறது. பணமதிப்பு நீக்கம், இதுவரையிலும் இந்தியா காணாத ஒரு பயங்கப் பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது

ஒவ்வொரு ஆண்டும் ஒருகோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்போம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த பாஜக அரசு அவர்களை இன்று தெருக்கோடியில் தள்ளியுள்ளது. இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லாத அளிவிற்கு கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஒரு கோடி வேலைவாய்ப்புகள்

பறிக்கப்பட்டு அத்தனை பேரும் வீதிக்கு விரட்டப்பட்டிருக்கிறார்கள். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காதது ஏன் என்ற பிரச்சனை இப்போது பின்னுக்குத் தள்ளப்பட்டு உள்ள வேலையையும் மிகப்பெரிய அளவிற்கு பறித்திருக்கிறார்கள் என்பது இந்திய இளைஞர்களின் கனவுகளுக்கு மிகப்பெரிய அடியாகும். இதன்மூலம் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வும், வாழ்வாதாரங்களும் சூறையாடப்பட்டுள்ளன. குறைந்த நபர்கள் குறைந்த சம்பளத்தில் வேலை என்பது ஐ.டி. நிறுவனங்களில் சர்வசாதாரணமாகிவிட்டது. தொடர்ந்து வேலை நீக்க அறிவிப்புகள் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. அடுத்து எந்த திசையிலிருந்து எந்த வேலைநீக்க அறிவிப்பு வெளிவரும் என்ற திகிலோடு மக்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட தகவல்கள் இந்தியப் பொருளாதாரம் மிக மிகக் கடுமையான வீழ்ச்சிக்குள் விழுந்திருக்கிறது என்பதை பிரகடனம் செய்யும் முக்கியத் தகவல்கள் ஆகும். ஆனால் இது குறித்து மோடி அரசு சற்றும் கவலைப்படுவதாக தெரியவில்லை. இந்த விபரங்களை அலட்சியப்படுத்துவதிலும் தட்டிக்கழிப்பதிலும் மறுப்பதிலும்தான் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். இந்திய பொருளாதார நிலை குறித்து பல்வேறு தரப்பினருடன் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நடத்தும் ஆலோசனைகள் அனைத்தும் கார்ப்பரேட்டுகளுக்கு கருணையளிப்பதாகவும், ஏழை எளிய நடுத்தர மக்களை நடுத்தெருவில் விட்டுவிடுவதாகவுமே இதுவரையில் அமைந்துள்ளன. பொதுத்துறைகளை தனியாருக்கு விற்றுவிடுதல் அல்லது மூடிவிடுதல், வங்கிகளை இணைத்துவிடுதல், நிர்வாகத்தில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேலை வாய்ப்பின்மை நிலையை கருத்தில் கொள்ளாமல் இருக்கின்ற வேலைகளை ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையில் செய்துகொள்ளுதல் போன்றவற்றின் மூலம் இந்திய பொருளாதாரத்தை தூக்கி நிறுத்திவிடலாம் என்று ஒன்றிய அரசு பகல் கனவு கண்டுவருகிறது.

இதன் விளைவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து ஒருநாள் விபரீதமாகிவிடக்கூடாது என்பதற்காக நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் சில அரசியல்கட்சிகளும் மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை செய்ய போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன. பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்த்திட மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை கண்டித்தும் பொதுச் சொத்துக்களை பாதுகாத்திட வலியுறுத்தியும் இளைஞர்களின் வேலை வாய்ப்புகளுக்கு உத்தரவாதம், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், விவசாயிகள் நம்பிக்கையுடன் விவசாயம் செய்வதற்கான திட்டங்கள் போன்றவற்றை வலியுறுத்தி நாடு முழுவதும் கிளர்ச்சிப் போராட்டங்களும், பேரணிகளும், மாநாடுகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்த வரை அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, விவசாயிகளுக்கு தொழிலாளர்களுக்கு உண்டான உரிமைகளை, சம்பளங்களை, சலுகைகளை வழங்குவதற்கு கஜானாவில் பணமில்லை என்ற காரணம் கூறி வரும் ஆளும் கட்சியும், ஆண்ட எதிர்க்கட்சியும் கோடிக்கணக்கில் தேர்தல்களில் செலவழிக்கும் பணம் நிச்சயம் யாருடையதாக இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை. மக்களை வறுமை நிலையிலும், நோயிலும், பசி பட்டினியிலும் வைத்துவிட்டு இந்த அரசியல்வாதிகள் மக்களிடமிருந்து கசக்கிப் பிழிந்து எடுத்த வரிப்பணத்தை தங்கள் கஜானாக்களில் அடைத்துகொண்டு தங்கள் சுயலாபங்களுக்காக மட்டுமே அரசாங்கத்தை அரசு இயந்திரத்தை பயன்படுத்துவது ஜனநாயகத்தை இழிவு படுத்தும் செயலாகும். தேர்தலுக்குத் தேர்தல், ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் கூறும் வாக்குறுதிகளை நம்பி நம்பி ஏமார்ந்து போனவர்களாக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், விவசாயிகளும், தொழிலாளிகளும் வைக்கப்பட்டிருப்பது

இனிமேலும் நடக்காது என்பதை அரசியல் கட்சிகளுக்கு புரிய வைக்க வேண்டிய விளிம்பில் நாம் அனைவரும் நிற்கிறோம்.

அதிகாரமும் பணமும் வைத்திருப்பவர்களுக்குத்தான் நாட்டில் ஜனநாயகமும், நீதியும் கிடைக்கத் தக்கது என்ற போக்கை நாம் மாற்றாத வரை ஏய்த்துப் பிழைப்பவர்கள் தான் நம்மை ஆட்சி செய்வார்கள். அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களின் சட்டப்படியான உரிமைகளுக்காக கடந்த இருபது ஆண்டுகளாக தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் நிலையில் அதை தருவதற்கான தார்மீகக் கடமையிலிருந்து ஆட்சியாளர்கள் நழுவப் பார்ப்பது புரட்சியின் தோளை உரசிப்பார்ப்பதற்கு ஒப்பானதாகும். நம்முடைய கோரிக்கைகள் அனைத்திலும் உள்ள நியாயங்களை உணர்ந்துள்ள முதல்வரே எல்லா கோரிக்கைகளையும் தன்னுடைய இதயச் சிறைக்குள் பூட்டி வைத்துக் கொண்டு கோரிக்கைகளை நிறைவேற்றாமலும், எந்தவித பதிலும் கூறாமலும் வாய்மூடி இன்னும் மௌனம் காக்கிறார். நாமும் தொடர்ந்து விதவிதமான போராட்டங்களை நடத்தி அவருடை கவனத்தை ஈர்க்கப்பார்த்தும் அவர் அதைப்பார்க்க மனமில்லாமல் கண்களையும் காதுகளையும் வாயையும் பொத்திக்கொண்டுள்ளது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை மலினப்படுத்தும் செயலாகும்.

ஒன்றிய மற்றும் மாநில அரசின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் சமதர்ம சமத்துவ சமுதாயம் உருவாக்குவதில் கவனம் செலுத்தாமல் தங்கள் மற்றும் தங்களை சுற்றியுள்ளவர்களின் சுயநலங்களுக்காக, செல்வ வளங்களுக்காக அரசியலமைப்புச் சட்டம் கொடுத்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தி மக்களை துயரத்தில் தவிக்க விட்டுள்ளனர். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களும் மக்களின் ஒரு பகுதியினரே. அவர்களுக்கான உரிமைகளை கொடுப்பதில் இந்த ஆட்சியாளர்கள் இரட்டை வேடம் போடுவது இவர்கள் யாரும் மக்களுக்காக சேவை செய்ய வந்தவர்கள் இல்லை என்பதை உணர்த்துவதாக உள்ளது. இந்த 2024 புத்தாண்டில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு சிறந்த இந்தியாவை கட்டமைப்பதற்கான பணிகளில் ஈடுபடுவதோடு நம்முடைய உரிமைகளை பெறுவதற்கான போராட்டங்களையும் இன்னும் உறுதியோடு இரட்டிப்பாக்குவோம். தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என அனைத்து தரப்பினரும் சேர்ந்து ஒரு வளமிக்க வாழ்வை தேர்வு செய்து வாழ்ந்திட ஏதுவான ஒரு சிறந்த இந்தியாவை கட்டமைப்பதற்காக ஒன்றிணைவோம். கடந்த ஆண்டில் நடைபெற்ற கசப்பான நிகழ்வுகள் நடைபெறாமல் அமைதி, வளம், சகோதரத்துவம், நல்லிணக்கம் என அனைத்தும் இந்த புத்தாண்டில் வலுப்பெற உறுதி ஏற்போம். கோரிக்கைகளை நிறைவேற்றாமல் நீண்டதொரு மௌனம் காக்கும் முதல்வர் நம்மை அழைத்து நம்முடைய கோரிக்கைகளை தீர்க்கும் வகையில் நம்முடைய போராட்டங்களையும் வடிவமைப்போம் திட நெஞ்சோடு, தீர்க்கமான முடிவோடு! ●

## சூடா ஒரு கோப்பை சூப்

**தனித்து நிற்கலாமா தோழமை?**

வாசலில் நிற்கிறது
நமக்கான விடுதலை
நாம் படி தாண்டா விடில்
பறந்து போய்விடும்!

கட்டுப்படாத காற்றுவெளியில்
கனலை இறைக்கிறது வானம்பாடி
குருதியின் கரைகள் பொங்குகின்றன!

தனித்து நிற்கலாமா
நம் தோழமை மானுடம்?

- இன்குலாப்

# புத்தாண்டில் சபதமேற்போம் !

நெருப்பை சந்திக்காத தங்கமோ, உளியை சந்திக்காத சிற்பமோ, யுத்தத்தை சந்திக்காத தேசமோ, வீரசமர் புரியாத அமைப்போ முழுமை பெறுவதில்லை, வளர்ச்சி அடைவதில்லை. எந்த இயக்கத்தின் வரலாற்றிலும் போராட்டங்களே எதிராளிகளை அதிகார வர்க்கங்களை, அரசாங்கங்களை பணிய வைக்கும் பெரிய ஆயுதங்களாக இருந்துள்ளன என்பதை இயக்க வரலாறுகள் அறிந்த எவரும் உணர்வர். தமிழக அரசு ஊழியர் வரலாற்றில் பல முறை காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

அவற்றில் 1978, 1988, 2003, 2016, 2017, 2019 போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இந்த போராட்டங்கள் மூலம் அரசாங்கங்களால் மறுக்கப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்பட்ட உரிமைகளை அரசு ஊழியர்கள் வென்றிருக்கிறார்கள். அமைப்பு ரீதியாக உள்ள உழைப்பாளர் வர்க்கத்தில் போராட்டம் என்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. உழைப்பாளி வர்க்கம் போராடாமல் எந்த உரிமையையும் பெற முடியாது என்பது மீண்டும் மீண்டும் உணர்த்தப்பட்டு வருகிறது. உரிமைகள் மறுக்கப்படும் இடங்களில் அமைப்பு ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட உழைப்பாளி வர்க்கம் போராடாவிடில் அதன் தரம் தாழ்ந்துவிடுவதோடு, ஒட்டுமொத்த சங்கமும் முன்னேற்றமின்றி வீழ்ந்து விடும் என்பதையும் அரசு ஊழியர்கள் உணர்ந்துள்ளார்கள்.

என்ன லட்சிய நோக்குடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துவக்கப்பட்டதோ, அதற்காக கடந்த 40 ஆண்டுகளாக அந்த லட்சியத்திற்காக, சமரசம் செய்து கொள்ளாமல் தொடர்ந்து ஊழியர்களின் உரிமைகளுக்காக போராடி வருகிறது. அரசு ஊழியர்களின் உரிமைகள் மீது எந்த அரசாங்கமும் ஏனோதானோவென்று முடிவெடுத்து விட முடியாதபடி ஊழியர்களை காப்பதும், அவர்தம் உரிமைகளை கேட்பதும், போராட்டங்களை முன்னெடுத்து அதிகார வர்க்கத்திற்கு எதிராக போராடுவதுமான நடவடிக்கைகளில் மற்ற இயக்கங்களை விட முன்னோடி இயக்கமாக இந்த இயக்கம் விளங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை புறந்தள்ளிவிட்டு எந்த ஒரு அரசாங்கமும் அரசு ஊழியர்கள் மீதான உரிமைகள் மீது கை வைத்து விடவோ அல்லது கை விரித்துவிடவோ முடியாத அளவுக்கு பாதுகாப்பு கவசமாக, அரணாக இன்று ஒரு மாபெரும் இயக்கமாக விளங்குகிறது என்றால் அதற்கு காரணம் அதனைத் தோற்றுவித்த ஆசான் எம்.ஆர்.ஏ . அவர் வழிபற்றிய தோழர்களின் அர்ப்பணிப்பும், செயல்பாடுகளும் தொடர்ந்து நடத்திய போராட்டங்களும், விட்டுக்கொடுக்காத உரிமைகளும் தான்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் போராடிப் பெற்ற பல்வேறு உரிமைகள் கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்டன. வரலாறு காணாத அடக்கு முறைகளை கட்டவிழ்த்துவிட்டும், கொடூரமான எஸ்மா, டெஸ்மா சட்டத்தைப் பயன்படுத்தியும் அரசு அடக்குமுறைகளை கையாண்டது.

உலகில் சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிற நாடுகளில் கூட கேள்விப்பட்டிராத முறையில் ஒரே ஆணையின் மூலம் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இத்தகைய கொடுமையான நடவடிக்கைகள் அரசு ஊழியர்கள்,

ஆசிரியர்கள் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

அவ்வமையம் தங்களைத் தாக்கியபோது அனுபவித்த கொடுமைகள் அத்தனைக்கும் பகை முடிக்கும் பணியினை திர்மானத்திட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 7ஆம் மாநில மாநாடு மதுரையில் நடத்திட திட்டமிட்டு பிரச்சார பணியில் ஈடுப்பட்டுக் கொண்டிருக்கும்போது அதன் தாக்கத்தை உணர்ந்த அதிமுக அரசு 20.10.2004 அன்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியது. பேச்சுவார்த்தையில் அன்றைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள் நடந்தவைகளை மறந்து நடப்பவைகள் குறித்த புரிதலோடு அரசு சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தும் என தெரிவித்தார்.

அவ்வாறு அன்றைய முதல்வர் தெரிவித்தது தேர்தல்களில் ஓட்டுகள் பெற்றிடுவதற்கான சந்தர்ப்பவாத செயல் என்பதனை நாடாளுமன்றத் தேர்தலில் பிரதிபலித்தது. அதைத்தொடர்ந்து தேர்தல் முடிவுகள் அறிவிப்பிற்கு பிறகு அன்றைய அரசு தாம் கொண்டு வந்த பிற்போக்குச் சட்டங்களை திரும்பப் பெற்றதுடன் அரசு ஊழியர், ஆசிரியர்களிடம் பறிக்கப்பட்ட உரிமைகள், சலுகைகள் சிலவற்றை திரும்ப வழங்கியது. ஆனால் அதே நேரத்தில் அரசு ஊழியர்களுக்கு பறிக்கப்பட்ட அனைத்தையும் திரும்ப கொடுக்கப்பட்டது போன்ற பிரமையை ஊழியர்களிடமும், மக்களிடமும் ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தியது.

எப்படிப்பட்ட சந்தர்ப்பவாத நிலையெடுத்தாலும் அதிமுக ஆட்சியின் அடக்கு முறையால் ஏற்பட்ட ரணங்களும், வடுக்களும் என்றென்றும் நினைவில் விட்டு அகலாத நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியுறச் செய்தும், அதனைத் தொடர்ந்து சட்டப் பேரவைக்கான தேர்தலில் அதிமுக அரசாங்கம் வீழ்த்தப்பட்டு டாக்டர் கலைஞர் தலைமையிலான திமுக அரசாங்கம் பொறுப்பேற்றது.

அதேபோல்தான், கடந்த 10 ஆண்டுகள் அதிமுக அரசின் சர்வாதிகார தர்பாரிலிருந்து தமிழகம் விடுபட்டு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒட்டுமொத்த உழைப்பாளி மக்கள் சுதந்திரக் காற்றினை சுவாசிப்பதற்கான உணர்வை உருவாக்கும் அரசாக மாண்புமிகு மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு நமது வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எதிர்பார்த்தது.

இதன் பின்புலத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14வது மாநில மாநாடு சென்னையில் 2021 டிசம்பர் 17,18 தேதிகளில் நடைபெற்றது. அம்மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை மேடையில் அமரவைத்து அவர்தம் அரசை பாராட்டியும் பின்வருமாறு தெரிவித்தும் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்களின் பலத்த கை தட்டலோடு முன்மொழிவு நிறைவேற்றப்பட்டது.

“அரசு ஊழியர்களுடன் இவ்வரசு கொண்டுள்ள நல்லுறவும், இணக்கமான அணுகுமுறையும் மேலும் வலுப்பெற வேண்டுமென்ற விழைவினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அரசின் நலத்திட்டங்களின் பயன்கள் அனைத்தும் முழுமையாக உரிய பயளாளிகளான மக்களை சென்றடைய அர்ப்பணிப்பு உணர்வுடன் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு பாடுபடுவார்கள் என்ற உறுதியையும் திமுக அரசுக்கு பக்கபலமாக இருப்போம்” என்று இம்மாநாடு தெரிவித்துக்கொள்கிறது.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்ற கேள்வியை முன் வைத்து கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த திமுக அரசு, கடந்த மூன்று ஆண்டுகளில் தேர்தல் வாக்குறுதிகளின்படி அவற்றை நிறைவேற்றுவதற்கு மாறாக(மக்களின் கோரிக்கைகளை 85% நிறைவேற்றப்பட்டது என்று கூறுகிறார்

மாண்புமிகு முதல்வர் மு.க. ஸ்டாலின்) அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஒன்றைக்கூட நிறைவேற்றாமல் ஜனநாயகத்திற்கு விரோதமான சமூக நீதிக்கு எதிரான பல்வேறு அரசு ஆணைகளை பிறப்பித்து, அனைத்து அரசுத்துறைகளையும் தனியார்மயத்தை நோக்கி செல்லக்கூடிய நிலையில் அவுட்சோர்சிங், ஒப்பந்த முறை மற்றும் அத்தக்கூலி முறையை தொடர் நிகழ்வாக அரங்கேற்றி வருகிறது.

எனவே, மத்திய மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து விதமானத் துறைகளின் உண்மையான பணி என்ன என்பதை அழுத்தமாக சமீபத்திய பெருமழை பதிவு செய்து விட்டு சென்றுள்ளது. இதற்கு முன்பும் இயற்கை சீற்றங்கள் பல அறிவுப்புகட்டலை திணித்து சென்றிருந்தாலும் இம்முறை பிட்டுக்கு மண் சுமக்கச் சென்று, உண்டு கடமைத் தவறி உறக்க மயக்கத்தில் இருந்தவன் முதுகில் சாட்டையினால் கடமையை செதுக்கியது போன்ற எச்சரிக்கையை இந்த பெருமழை விட்டுச் சென்றுள்ளது என தமிழக அரசு உணர வேண்டும். பத்திரிகைச் செய்திகளின்படி 4.5% அதிகமாக மழை பொழிந்ததே வெள்ள பாதிப்புக்கு காரணம் என சொல்லப்பட்டாலும் முந்தைய ஆண்டுகளின் அனுபவங்களிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ளாமல், போதுமான முன் ஏற்பாடுகள் செய்யாமல் இருந்தது தான் மக்களை மிக மோசமான பாதிப்புக்குள்ளாக்கியது. அதுபோல் தமிழ்நாடு அரசு போதிய அளவுக்கு முன் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

இதை தவிர தமது ஒவ்வொரு போராட்ட இயக்கத்தின் மூலமும் நமது சங்கமும் நம்முடன் இணைந்து களம் காணும் அனைத்துத்துறை சங்கங்களும் தமிழக அரசின் போக்கில் நல்ல மாற்றம் தேவை என்பதையும், நிர்வாக சீர்கேடுகளை பட்டியலிட்டு அவற்றை உடனடியாக சரி செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். இந்த வலியுறுத்தலின் உண்மைத் தன்மையை புரிந்து கொள்ளாமல் இயக்கங்களை காவல் துறையின் உதவியோடு முறியடிப்பதும், சமீபத்திய 2023 டிசம்பர் 28 ஜாக்டோ-ஜியோ கோட்டை முற்றுகை போராட்டம் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பங்கேற்ற போராட்டத்தில் குறைந்தபட்சம் மாண்புமிகு தமிழக முதல்வர் சந்தித்து கோரிக்கை மனுவை வாங்க மறுத்து விட்டார்.

பேச்சுவார்த்தை என்ற பெயரில் தலைமைச் செயலாளரிடம் பேசப்பட்டது. குறைந்தபட்சம் நாகரீகமற்ற முறையில் நடந்து கொண்டார். மாநில ஒருங்கிணைப்பாளர்களை அமர வைத்து பேசுவதற்கு உரிய ஏற்பாடு இல்லை. கோரிக்கை குறித்து பேசும் பொழுது உரிய கவனத்துடன் தலைமைச் செயலாளர் உள்வாங்கி கொள்ளவில்லை. போலியான வாக்குறுதிகளை அளிப்பதுடன், சங்கத்தின் உறுதிப்பாட்டினை குலைக்கக்கூடிய விதமாக ஊழியர்களை கைது நடவடிக்கை மேற்கொள்கிறது. தமிழக அரசு ஊழியர், மக்கள் நலனை முன்னிறுத்தி போராடும் சங்கங்களுக்கு உரிய அங்கீகாரம் அளித்து காலமுறை கூட்டங்கள் நடத்தி கோரிக்கைகளை பரிசீலித்து நிறைவேற்ற இனியாவது தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தும் என நம்புவோம்.

மக்களுக்கு சொந்தமான நிலங்களை அபகரித்துக்கொள்ள தனியாரும், தனியார் நிறுவனங்களும் இயற்கை பேரிடரின்போது நடந்து கொண்ட முறை அவர்களின் லாப வேட்கையை தோலுரித்துக் காட்டியுள்ளது. அதே நேரத்தில் அரசு ஊழியர்கள் சொந்த காரணங்களைச் சொல்லி விடுப்பில் செல்ல வாய்ப்பிருந்தும் அப்படி செய்யாமல் மிகக் குறைந்த வாய்ப்பு வசதிகளில் உயிரையும் பணயம் வைத்துப் பணிபுரிந்து, தமிழக அரசின் மரியாதையை இந்தளவு காப்பாற்றியுள்ளனர். மத்தியக்குழுவே பாராட்டும் அளவுக்கு பணி புரிந்தவர்கள் என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்

புரிந்து கொள்ள வேண்டும். மேலும் நேரடியாக சம்பந்தப்பட்டத் துறைகளைத் தாண்டி பல துறை ஊழியர்கள் இன்று வரை கூட புனர் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் நமது சங்கமும், நமது தோழமை துறைச்சங்கங்களும் சேர்ந்து கோடிக்கணக்கான மதிப்புள்ள நிவாரணப் பொருட்களை மக்களுக்கு அளித்துள்ளன. இந்த பெரும் பாதிப்புள்ள சென்னை உட்ளளிட்ட நான்கு மாவட்டம், தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மக்களின் பெரிய பாதிப்பை கணக்கில் எடுத்துக்கொண்டு கடந்த காலங்களைபோல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பும் சேர்ந்து ஒரு நாள் ஊதியத்தை வெள்ள நிவாரண பணிகளுக்கு கொடுப்பது என முடிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து நமது கோரிக்கை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு நம் சங்க பெயரிலேயே ஒரு நாள் ஊதியத்தை வெள்ள நிவாரண நிதிக்கு பிடித்தம் செய்ய அரசாணை வெளியிட்டுள்ளதை வரவேற்கிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக மாண்புமிகு முதல்வர் அளித்த தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற, பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தியும் நமது கோரிக்கை ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை என்ற பின்னணியில் நமது சங்கம் 2023 அக்டோபர்-7 செங்கல்பட்டில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவப் பேரவையின் போராட்ட அறைகூவல் முடிவுகளின்படி மாவட்டத் தலைநகரில் ஆர்ப்பாட்டம், ஊழியர் சந்திப்பு பிரச்சாரம், மாவட்ட தலைநகரங்களில் மறியல், இறுதியாக கோட்டை நோக்கி பேரணி என முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் கூட்டுப் போராட்டத்தின் வலிமையையும், ஒற்றுமையையும் கருத்திற்கொண்டு நமது சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறைகூவல் தீர்மானத்தின் இயக்கங்களை மாநில செயற்குழு முடிவின்படி ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பில் எடுக்கப்பட்ட கோட்டை முற்றுகைப் போராட்டம் உள்ளிட்ட நான்கு கட்ட இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வதென முடிவு எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2023 டிசம்பர் 28 வரலாற்று சிறப்பு மிக்க கோட்டை முற்றுகைப் போராட்டத்தினை நடத்தி உள்ளோம்.

ஆனாலும் நமது கோரிக்கைகள் அழைத்து பேசி தீர்வு காணப்படவில்லை. எனவே தமிழக அரசின் கனத்த மௌனத்தை கலைக்க நாம் உரக்க குரல் எழுப்ப வேண்டியுள்ளது. ஆக இந்த புத்தாண்டு நமது உரிமைகளுக்கான களம் காணும் ஆண்டாகவே மலர்கிறது. மலர்ந்து மாலையில் உதிரும் மலராக அல்ல. காலங்காலமாய் நமது முன்னோடிகள் காட்டிய நெறிப்படி இன்று உழைப்பாளிகள் அனுபவிக்கும் ஒவ்வொரு உரிமையும் ஆட்சியாளர்களின், அதிகாரிகளின் கருணையினாலோ, காருண்யத்தினாலோ பெறப்பட்டவை அல்ல.விடாப்பிடியான போராட்டங்களினாலும், அளப்பறிய தியாகங்களினாலும் அரசின் சட்டை பையில் இருந்து பறித்து எடுக்கப்பட்டவை என்ற வாசகங்களை மனதில் தாங்கி சக்திமிக்க போராட்ட களம் நோக்கி பீடு நடை போடுவோம்.

ஆம் தோழர்களே இழப்புகளை மீட்டிட, அடக்குமுறை அச்சுறுத்தலை வேரறுக்க நமது வாழ்வாதார கோரிக்கையான பழைய பென்சன், முடக்கப்பட்ட சரண்டர், சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தொகுப்பூதியம் பெறும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், அரசுத்துறையில் காலி பணியிடம் பூர்த்தி செய்திடவும், சாலைப் பணியாளர்கள் 41 மாத பணி நீக்கக் காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், அரசுத்துறைகளில் ஆட்குறைப்பு அரசாணைகள் ரத்து செய்திடல் உள்ளிட்ட கோரிக்கைகளை வென்றெடுக்க வலுமிக்க போராட்ட இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வோம் என இப்புத்தாண்டில் சபதமேற்போம்.

●

## கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின்

# எழுச்சிமிகு பவளவிழா ஆண்டு ஐந்தாவது மாநில மாநாடு

**- பொன். ஜெயராம்**

தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் பவளவிழா ஆண்டு ஐந்தாவது மாநில மாநாடு 16.12.2023 சனிக்கிழமை அன்று ஈரோடு, பூந்துறை ரோடு, ஏ.எம்.மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டில் தொடக்கமாக தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களின் நினைவுச் சுடர் ஏந்தி கொடி அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பின் சிறப்பு விருந்தினராக தோழர். ஆர்.எம்.எஸ் அவர்களின் துணைவியார் மற்றும் மகனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அணி வகுப்பு முடிந்து தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களின் நினைவுச் சுடரினை மாநிலத்தலைவர் தோழர்.அ.சேகர் தோழர். ஆர்.எம்.எஸ். அவர்களின் குடும்பத்தாரிடம் வழங்கினார். அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பதாகையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர்.ஆ. செல்வம் அவர்களும், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் பதாகையை மாநிலத் தலைவர் தோழர்.அ.சேகர் அவர்களும் ஏற்றினர். மாநில மாநாட்டின் அடுத்த நிகழ்வாக தோழர்.ஆர்.எம்.எஸ் அவர்களின் துணைவியாருக்கும், அவருடைய மகனுக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

மாநில மாநாட்டிற்கு வந்திருந்தவர்களை வரவேற்பு குழு தலைவரும் , தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணை பொது செயலாளருமான தோழர்.மு.சீனிவாசன் அவர்கள் வரவேற்று, வரவேற்புரை ஆற்றினார். அஞ்சலி தீர்மானத்தை நமது சங்கத்தின் துணைத் தலைவர் தோழர்.தே. ராஜேஷ் அவர்கள் வாசிக்க அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநாட்டினை மாநில தலைவர் தோழர் அ. சேகர் தலைமை தாங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர்.ஆ.செல்வம் மாநாட்டினை தொடங்கி வைத்து தொடக்க உரையாற்றினார். இந்த மாநாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 600க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். மாநாட்டில் வேலை அறிக்கையினை பொதுச் செயலாளர் தோழர். பொன்.ஜெயராம் அவர்களும், நிதிநிலை அறிக்கையினை மாநிலப்பொருளாளர் தோழர். நா.வினோத்குமார் அவர்களும் சமர்ப்பித்தனர். செயலாளர் மற்றும் பொருளாளர் அறிக்கை விவாதத்திற்காக முன்மொழியப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டு, பின்பு விவாதங்களின் அடிப்படையில் தொகுப்புரை வழங்கப்பட்டு அறிக்கை முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாநாட்டில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத்துணைத்தலைவர் தோழர்.கு.குமரேசன், தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர். பன்னீர்செல்வம், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் ஈரோடு மாவட்ட செயலாளர் தோழர் மணி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி தொகுப்பூதிய ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் லட்சுமணன் உள்ளிட்ட தோழமைச் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். பின்பு மாநில நிர்வாகிகள் தேர்வுக்காக முன்மொழிவுகள் வைக்கப்பட்டு கீழ்கண்ட நிர்வாகிகள் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.தோழர். பொன்.ஜெயராம் மாநில தலைவராகவும், தோழர்.நா.வினோத்குமார் பொதுச் செயலாளராகவும், தோழர்.சா.விஜய மனோகரன் பொருளாளராகவும், மாநில

துணைத்தலைவர்களாக தோழர்கள். சி. செல்வகுமார், சி.ஜெ.குறிஞ்சி வேலன்,பொ. திருப்பதி, கே. பாண்டித்துரை, தே. ராஜேஷ், ம.தேவசேனன் ஆகியோரும், மாநிலச் செயலாளர்களாக தோழர்கள்.ம. எழில் இளம் வழுதி, ப.பேச்சியம்மாள், டே.டேவிட் கிறிஸ்டோபர், பா.அண்ணாதுரை , கோ. வெங்கடேஷ் பாபு, நி.முகமது நhசிர் ஆகியோரும், மாநில தணிக்கையாளர்களாக தோழர்கள். ப.பழனிவேல், எம்.பத்மகுமார் ஆகியோரும் ஏக மனதாக தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் தோழர்.மு. அன்பரசு நிறைவுறையாற்றினார். வரவேற்பு குழு செயலாளர் தோழர்.பழனிவேல் நன்றி உரையாற்றினார். மாநாட்டில் அறைகூவல் தீர்மானங்களாக கீழ்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக இயற்றப்பட்டது.

1. எதிர்வரும் டிசம்பர் 28ஆம் தேதி ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு சார்பாக நடைபெற உள்ள சென்னை கோட்டை முற்றுகை போராட்டத்தில் கல்வித் துறை ஊழியர்கள் முழுமையாக பங்கேற்பது.

2.கல்வித் துறை ஊழியர்களின் நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி எதிர்வரும் டிசம்பர் 29ஆம் தேதி (29.12.2023) மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வி இயக்குனர் ஆகியோரை நேரில் சந்தித்து முறையீட்டு மனு அளிப்பது.

3. நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி எதிர்வரும் ஜனவரி 30 ஆம் தேதி (30.01.2024) அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது.

4. கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் அடுத்த கட்ட போராட்டமாக எதிர்வரும் பிப்ரவரி 21ஆம் தேதி (21.02.2024) சென்னை பள்ளிக்கல்வி இயக்குனர் அலுவலகம் முன்பாக மாநிலம் தழுவிய பெருந்திரள் முறையீடு போராட்டத்தினை நடத்துவது.

உள்ளிட்ட 23 தீர்மானங்கள் இயற்றப்பட்டது. ●

## அரசியல் உணர்வு இல்லாதவர்களா இளைய தலைமுறை!!

### - ஏ.கே.பத்மனாபன்

*கேள்வி: தொழிற்சங்க உணர்வு இல்லாத, ஏன் போதிய அளவு அரசியல் உணர்வும் இல்லாத ஒரு இளைய தலைமுறை நாட்டில் உருவாகி வருவதாக அரசியல் பார்வையாளர்கள் கூறி வருகிறார்கள். இது பற்றி தங்கள் கருத்து என்ன?*

இன்றைய தொழிலாளர்கள் பலவேறு துன்ப துயரங்களை சந்தித்து, அடக்கு முறைக்கு ஆளாகி, பல்வேறு தியாகங்களை செய்து, தொழிற்சங்க போராட்டங்கள் காரணமாக 4-வது படியில் நிற்க முடிகிறது என்று வைத்து கொள்வோம். புதிதாக வேலைக்கு வருகிற ஒரு இளைஞர் நேராக 4-வது படிக்கு வந்து விடுகிறார். அவருக்கு, இதற்கு முந்தைய 3 படிகளை பற்றி, எப்படி 4-வது படிக்கு நேராக அவரால் வர முடிந்தது என்பதை பற்றி எடுத்து சொல்வதே இல்லை. இது ஒரு ப்ராசஸ். தொழிற் சங்க போராட்டங்கள், தொழிற் சங்க இயக்கத்தினரின் தியாகங்கள் பகிர்ந்து கொள்ளப் பட வேண்டும்.

இன்றுள்ள கால கட்டத்தில் புதிய உரிமைகளையும். சலுகைகளையும் போராடி வென்றெடுப்பது என்பதற்கிடையே, ஏற்கனவே இருப்பதை தக்க வைத்து கொள்வதற்கும் போராடியாக வேண்டிய நிலைமை உள்ளது. இந்த சூழல் இளைஞர்களிடத்தில் எடுத்துரைக்கப்பட வேண்டும்.

இது ஒரு புறமிருக்க, இளைஞர்களிடத்தில் அரசியலே வேண்டாம், எதுவுமே சரியாக இல்லை என்பது மாதிரியான ஒரு பிரச்சாரம் நடத்தப்பட்டு வருகிறது. இவற்றை முறியடிக்கும் வகையில் ஜனநாயக சக்திகள் பணியாற்ற வேண்டும். முற்போக்கான இளைஞர் அமைப்புகள் உருவாக்கப்பட்டு ஊக்குவிக்கப் பட வேண்டும். ●

# ஜாக்டோ – ஜியோ (JACTTO - GEO)

ஜாக்டோ ஜியோ

Joint Action Council of Tamilnadu Teachers Organisation and Government Employees Organisation

# ஆசிரியர் - அரசு ஊழியர், அரசுப் பணியாளர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகள்

- 1.4.2003க்குப் பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினைக் கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே அமல்படுத்திட வேண்டும்.
- காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பு ஒப்படைப்பு, உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- இடைநிலை ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு, உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டு வரும் அநீதி களையப்பட வேண்டும்.
- முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், ஆகியோருக்கான ஊதிய முரண்பாட்டினைக் களைய வேண்டும். கல்லூரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணிமேம்பாடு (CAS) ஊக்க ஊதிய உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.
- சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், தொகுப்பூதியத்தில் பணியாற்றும் MRB செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.
- அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
- 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் அரசுப் பணியாளர்கள் ஆகியோருக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- 2002 முதல் 2004 வரை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் பணிக் காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப் படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும்
- சாலைப்பணியர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை முறைப்படுத்த வேண்டும்.
- உள்ளாட்சி அமைப்புகளிலும் பல்வேறு அரசுத்துறைகளிலும் தனியார் முகமை மூலம் பணியாளர்களை நியமனம் செய்வதை உடனடியாக தடை செய்திட வேண்டும்.

ஒன்று படுவோம்! போராடுவோம்!! வெற்றி பெறுவோம்!!

ஒருங்கிணைப்பாளர்கள்
மற்றும் உயர் மட்டக்குழு



# கியூப விடுதலையின் புரட்சிக் கவிஞர் ஒசே மார்த்தி

**- பெரணமல்லூர் சேகரன்**

கியூபப் புரட்சிக் கவிஞர் ஒசேமார்த்தி கியூபாவின் ஹவானாவில் சனவரி 28, 1853ல் பிறந்தார்.

1869ம் ஆண்டு கியூபாவில் பத்தாண்டுப் போர் என அழைக்கப்படும்,மேலாதிக்கத்துக்கு எதிரான கிளர்ச்சி ஆரம்பமானது. இளமை முதலே ஆதிக்கத்துக்கும், அது ஆதரித்த அடிமை முறைக்கும் எதிரான மனப்போக்கு கொண்ட மார்த்தி, இந்த கிளர்ச்சியில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். 16 வயதே ஆன மார்த்தியின் கவிதைகளும், புரட்சிக் கட்டுரைகளும் கிளர்ச்சியாளர்களின் மத்தியில் மிகுந்த அபிமானத்தைப் பெற்றன. இவர் தனது நண்பர் பெர்மென் என்பவருடன் இணைந்து இராணுவத்தில் சேர்ந்த மற்றொரு நண்பனுக்கு எழுதிய கடிதம் அரசாங்கத்தின் கைகளில் கிடைத்தது. இதைத் தொடர்ந்து தேசத்துரோக குற்றம் சாட்டப்பட்ட மார்த்திக்கு, ஆறு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படது. மார்த்தியின் வயது மற்றும் அவரின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைக்க வேண்டும் என அவரின் பெற்றோர்கள் போராடியதைத் தொடர்ந்து, சிறைத்தண்டனை விலக்கிக் கொள்ளப்பட்டு நாடு கடத்தப்பட்டார். மேமும் அங்கேயே தன் கல்வியைத் தொடரவும் அனுமதிக்கப் பட்டார்.

1874ல் தனது படிப்பை முடித்த மார்த்தி, அதே ஆண்டு தனது நண்பர் பெர்மனுடன் பாரிசுக்குப் பயணமானார். இறுதியில் 1875ல் அப்போது மெக்சிகோவில் தங்கி இருந்த தனது குடும்பத்துடன் இணைந்தார். மெக்சிகோவிற்கு வந்த மார்த்தி கியூப விடுதலையை மட்டும் அன்றி அந்நாட்டின் குடிமக்களுக்கு இருந்த உள்ளூர் பிரச்சனைகளைப் பற்றியும் எழுத ஆரம்பித்தார். கூடவே தனது கவிதை, மொழிபெயர்ப்பு ஆகியவற்றோடு நாடகங்களையும் எழுத ஆரம்பித்தார். 'காதலோடு காதலைத் திருப்பிக் கொடு' என்ற இவரது நாடகம் மெக்சிகோவின் முன்னனி நாடகக் குழுவால் தயாரிக்கப்பட்டுப் புகழ் பெற்றது. மெக்சிகோ வந்த ஒரே வருடத்திலேயே, மார்த்தி "கொரிசித்தா" எனப்படும் மெக்சிகோ எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களுக்கான சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்த சங்கத்திலேயே இவர் தனது எதிர்கால மனைவியான சயாசு பசானைச் சந்தித்தார்.

1877ல் தனது அடையாளத்தை மறைத்துக் கொண்டு, வேறு பெயரில் கியூபா சென்ற மார்த்தி, ஒரு மாதத்திற்கும் குறைவான நாட்களே அங்கு தங்கினார். பிறகு மெக்சிகோ வழியாக குவாத்தமாலா சென்ற மார்த்திக்கு அங்கு பேராசிரியர் பணி கிடைத்தது. சான் கார்லசு பல்கலைக்கழகத்தின் பிரெஞ்சு, ஆங்கிலம், இடாய்ச்சு மற்றும் இத்தாலிய இலக்கியம், வரலாறு, மற்றும் தத்துவம் ஆகிய துறைகளின் தலைவராக நியமிக்கப்பட்டார். இடையில் ஒரு முறை மெக்சிகோ சென்று திரும்பிய மார்த்தி, 1878ல் தனது தாயகமான கியூபாவிற்கு வந்து சேர்ந்தார். தொடர்ந்து தனது காதலியான சயாசு பாசனை மணந்தார். அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் மார்த்தி விண்ணப்பித்த வழக்கறிஞராகப் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பத்தை அரசு நிராகரித்தது. எனவே

பேராசிரியராக தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

இதன் பிறகு நியூயார்க் நகருக்குச் சென்ற மார்த்தி, அங்கு கலிசாட்டோ கார்சியா எனப்படும் கியூபப் புரட்சியாளரின், புரட்சிக் குழுவில் இணைந்தார். அரசினால் நாடு கடத்தப் பட்ட கியூபர்களால் நடத்தப்பட்ட இந்த குழு, நியூயார்க் நகரத்தை அடிப்படையாகக் கொண்டு கியூப விடுதலைப் போரை முன்னெடுத்தது. அடிப்படையில் இந்தக் குழுவில் இருந்த புரட்சியாளர்களுக்கும், மார்த்திக்கும் இடையே சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. குறிப்பாக பத்தாண்டுப் போரில் ஈடுபட்ட கியூப விடுதலைக் குழுவின் தளபதிகளான மேக்சிமோ கோமாசு மற்றும் அன்டோனியோ மாக்கோ கிராசல்சு ஆகியோர் 1884ல் முன்னெடுத்த படையெடுப்புக்கு மார்த்தி தனது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்தார்.

பொறுமையும் திட்டமிடலும், கியூப விடுதலைக்கு மிக முக்கியத் தேவைகள் என வாதிட்ட அவர், இந்தப் படையெடுப்பு அவசர கதியில் திட்டமிடப்பட்டது என கருத்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து அமெரிக்காவின் பல பகுதிகளுக்கும் சென்ற மார்த்தி, அங்கிருந்த கியூபக் குடிகளிடம், தமது நாட்டின் விடுதலையின் தேவையைப் பற்றி உரையாற்றினார். மத்திய அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் என பல இடங்களுக்கும் நீண்ட இந்தப் பயணத்தில் திரட்டப் பட்ட நிதி, கியூபப் புரட்சிக் குழுவின் தேவைகளுக்குப் பெரிதும் பயன்பட்டது. அதே நேரத்தில் 1894ல் இவர் பாட்ரியா நாளிதழில் எழுதிய கியூபா என்ற கட்டுரை அமெரிக்க மற்றும் அரசுக்குமிடையே இருந்த ரகசிய உறவை அம்பலப்படுத்தியது. அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் அரசுக்கு எதிரான ஆயுதம் தாங்கிய குழு ஒன்றை தயார் செய்யும் வேலைகளை மார்த்தி தொடங்கினார்.

1895ல் சனவரியில் மார்த்தியால் முன்னெடுக்கப்பட்ட கியூப ஊடுருவலில் சிறிது தடை ஏற்பட்டது. புரட்சிப் படைக்கு தேவையான ஆயுதங்களை கொண்டு சென்ற மூன்று நீராவிக் கப்பல்கள், வட அமெரிக்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டதை அடுத்து, மார்த்தி தனது படையெடுப்பை கைவிட நேர்ந்தது. இதைத் தொடர்ந்து, அப்போது டொமினிகன் குடியரசில் தங்கி இருந்த முன்னாள் கியூப புரட்சிப் படையின் தளபதியான மேக்சிமோ கோமாசை சந்தித்த மார்த்தி, தனது படையெடுப்பை பற்றி விளக்கியதோடு, அதில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்தார்.

மார்த்தியின் அழைப்பை ஏற்ற கோமாசோடு அவரின் படையணி, 1895ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் மவுன்டே கிரிசுடி நகரில் இருந்து புறப்பட்டது. அதே மாதம் பதினொன்றாம் திகதி கியூபாவின் மைசி கபேயை அடைந்த படை, அங்கிருந்த உள்ளூர் புரட்சிப் படையுன் கூட்டு சேர்ந்து கொண்டது. மே 19, தசு ரியோசு நகரத்தில் நடந்த தாக்குதல்களில் மார்த்தி கொல்லப்பட்டார்.

மார்த்தி, தனது கியூப விடுதலைக்கான முயற்சிகளுக்காக இன்றளவும் ஒரு தேசிய நாயகனாக கியூபாவில் கொண்டாடப் படுகின்றார். மேலும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்தின் விடுதலைப் போரிலும் அவரின் பங்கு இருந்தது. கியூபாவின் முன்னாள் அதிபரான பிடல் காஸ்ட்ரோ மார்த்தியைத் தனது அரசியல் தந்தை எனக் குறிப்பிடுகிறார். மார்த்தியின் காலம் தொட்டு கியூபாவில் நடந்து வந்த அனைத்து புரட்சி மற்றும் போராட்டங்களில் இவரது கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம், ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மார்த்தியின் பெயரால் விருதுகளை வழங்குகின்றது.

(கியூபப் புரட்சிக் கவிஞர் ஒசே மார்த்தி பிறந்த நாள்) ●

# சங்கம் கடந்து வந்த பாதை

**- ஏ.சேகர்**




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் சங்க பயிற்சி வகுப்பு தருமபுரி சிஐடியு அலுவலகத்தில் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ஏ.சேகர் வரவேற்றார். மாநிலத் துணைத்தலைவர் சி.எஸ். கிறிஸ்டோபர் தலைமை பண்புகள் குறித்து பேசினார். முன்னாள் மாநிலத்துணைத்தலைவர் இரா.ஜோதி சங்கம் கடந்துவந்த பாதை எதிர்கொள்ளும் சவால் என்ற தலைப்பில் பேசினார். மாநிலத்துணைத்தலைவர் கோ. பழனியம்மாள் மாவட்ட பொருளாளர் பி.எஸ். இளவேனில், மாவட்ட நிர்வாகிகள் R.ஜெயவேல், கே.புகேழந்தி, பெ.மகேஸவரி, குணசேகரன் ஆகியோர் பேசினர்.

1.4.2003க்குப் பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினைக் கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்திட வேண்டும். காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பு ஒப்படைப்பு, உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை உடனடியாக வழங்கிட வேண்டும்.

"இடைநிலை ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும்முதுகலை ஆசிரியர்களுக்கும் உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டு வரும் அநீதி களையப்பட வேண்டும். சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள். கல்வித்துறை, மாணவ விடுதிகள் மற்றும் இதர துறைகளில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் எம்ஆர்பி, செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள். பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். அரசு துறைகளில் காலியாக உள்ள சுமார் 6 லட்சம் பணியிடங்களை நிரப்பிட வேண்டும் காலை சிற்றுண்டி திட்டத்தை சத்துணவு ஊழியர்களிடம் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ - ஜியோ சார்பில் டிசம்பர் 28 கோட்டை முற்றுகை போராட்டத்தில் தருமபுரி மாவட்டத்தில் இருந்து நான்காயிரம் அரசு ஊழியர்கள் பெருந்திரளாக பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டது. ●

## " பஞ்ச் "

**மொரப்பா**



**காடுகளில் உள்ள மரங்கள்**
**அழிந்துகொண்டே வந்தன.**
**ஆனால் மரங்களோ மீண்டும் மீண்டும்**
**கோடாரிக்கே வாக்களித்தன.**
**ஏனெனில் மரத்தினால் செய்யப்பட்ட**
**தன் கைப்பிடியைக் காட்டி**
**"நானும் உங்களில் ஒருவன் தான்"**
**என கோடாரி ஏமாற்றியதை மரங்கள்**
**முழுமையாக நம்பின. மனதார நம்பின!**

கவிதை

# சொல்லத்தான் நினைக்கிறேன்

**- பெரணமல்லூர் சேகரன்**

தூய தமிழில் பேசவும் எழுதவும்
சொல்லத்தான் நினைக்கிறேன்
ஆயினும் அவ்வப்போது
என்னையுமறியாமல் வந்து விழும்
ஆங்கில வார்த்தைகள்
தங்கு தடையாகிறது

"அறம் செய விரும்பு"
சொல்லத்தான் நினைக்கிறேன்
ஆயினும் உயர்ந்து வரும் விலைவாசி
நாளை நகர்த்த நெருக்கடி தரும் நிலையில்
"தனக்கு விஞ்சினாலே
தானே தர்மம்"
என்று உள்மனம் உரைக்கிறது

"ஒருவனுக்கு ஒருத்தி"
சொல்லத்தான் நினைக்கிறேன்
ஆயினும் இளவிதவையும்
மனைவியிழந்த இளைஞனும்
கண்முன் நிற்கையில்
ஒருவனுக்கு இன்னொருத்தியும்
ஒருவளுக்கு இன்னொருவனும்
தேவைப்படுவதில் தவறில்லை
என்று எண்ணுகிறது மனம்

"தனியார் கல்வி நிலையங்களைப்
புறக்கணியுங்கள்"
சொல்லத்தான் நினைக்கிறேன்
ஆயினும் அரசு கல்வி நிலையங்களில்
சொற்ப ஆசிரியர்களும்
அக்கறையற்ற ஆசிரியர்களுமே
அதிகமெனும்போதில்
வாய் மூடி மௌனியாகிறேன்

வாசிப்பு சுவாசிப்பு ஒத்தது
வாசிக்காமல் ஒருநாளும் இருக்க வேண்டாமென
சொல்லத்தான் நினைக்கிறேன்
திறன்பேசியின்
இடைவிடாத சினுங்கல்களும் புலனச் செய்திகளும்
காயசண்டிகைப் பசியுடன்
நேரத்தைத் தின்று தீர்த்து
நிலைகுலையச் செய்துவிடுகின்றன

"வாக்குக்குப் பணம் பெறாதீர்கள்"
சொல்லத்தான் நினைக்கிறேன்
"நமது வரிப்பணத்தில்
அடித்த கொள்ளைகளில் கொஞ்சம்
கொடுத்துவிட்டுத்தான் போகட்டுமே
கொடுத்தாலும் நம் விருப்பப்படிதானே
வாக்களிப்போம்"
என்போரிடம்
மௌனமாகிறேன்

மூட நம்பிக்கைகளில் உழலாதீர்
கடவுள் பெயரைச் சொல்லி
ஊர் ஊராய்ச் சென்று
சிரமப்பட்டு ஈட்டும்
காசைக் கரியாக்காதீரென
சொல்லத்தான் நினைக்கிறேன்
"ஏழைகளின் ஏக்கப் பெருமூச்சு
மதமும் கடவுளும்"
என மேதைகள் உரைத்தது
என்னை உறைய வைக்கிறது

இப்படியாய்
சொல்ல நினைப்பவற்றை
இனி சொல்லித்தான் ஆகவேண்டும்
ஏனெனில் சொல்லாததால்
ஏற்படும் விளைவுகள் தீயவை
சொல்வதால்
ஏற்படும் மாற்றம் சிறிதாயினும்
நல்லவை தானே!

### 28.12.2023 – கோட்டை முற்றுகையின் போது முதல்வருக்கு அளித்த கடிதம்

# மௌனம் கலையட்டும்; சொன்ன சொல் பலிக்கட்டும்; கோரிக்கைகள் நிறைவேறட்டும் மாண்புமிகு முதல்வரே!

**ஜாக்டோ – ஜியோ**

மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு,

ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் - அரசுப் பணியாளர்கள் என அனைத்து அரசுத் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அனைத்து பள்ளிகள், கல்லுhரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் என சுமார் 10 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஜாக்டோ ஜியோ இயக்கத்தின் சார்பில், பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக அரசின் நிர்வாகமும், மக்கள் நலத்திட்டங்களும் தொய்வின்றி சிறப்பாக தொடர்ந்து நடைபெற அரசு ஊழியர்கள், பணியாளர்களின் பங்களிப்பும், வருங்காலத்தில் வளமான தமிழகத்தை வகுப்பறையில் உருவாக்க ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் இன்றியமையாதவை ஆகும். ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாக நாங்கள் அனைவரும் எங்களுடைய வாழ்வாதார உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறோம். எங்களுக்கான உரிமைகள் சலுகைகள் அனைத்தும் நாங்கள் போராடிப் பெற்றவை என்பது தாங்கள் அறியாததல்ல.

2011ஆம் ஆண்டு அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகும் சரி, அந்த ஆட்சி 2016ல் தொடர்ந்த பின்னரும் சரி, எங்களின் உரிமைகளும், சலுகைகளும் நிறுத்தி வைக்கப்பட்டும், பறிக்கப்பட்டும் தொடர்ந்து எங்கள் வாழ்வாதாரங்கள் நசுக்கப்பட்டும் வந்துள்ளன. அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களுக்கான புதிய உரிமைகளோ சலுகைகளோ இந்த காலகட்டங்களில் பெரிய அளவில் வழங்கப்படவில்லை.

2003ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்திய ஜெயலலிதா அம்மையார் அவர்கள் மனம்மாறி, 2011ல் தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து செயல்படுத்துவதாக தேர்தல் அறிக்கையிலும், தேர்தல் பிரச்சாரத்திலும் தெரிவித்திருந்தார். ஆனால் அவர் 2011ல் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தபோதும், அவருடைய ஆட்சியே 2016ல் தொடர்ந்த போதும் அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டிருந்தன.

எங்கள் வாழ்வாதாரங்களுக்கான நியாயமான போராட்டங்களை நாங்கள் தொடங்கியபோது அதிமுக ஆட்சியின் முதல்வராக பொறுப்பேற்றிருந்த திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் எந்த முதல்வரும் செய்யத்துணியாத காரியத்தை செய்தார். அவர் அரசு ஊழியர்கள், பணியாளர்கள், ஆசிரியர்களாகிய எங்களுடைய கோரிக்கைகளை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காததோடு, எங்களை நேரில் சந்தித்து எங்கள் முறையீடுகளை கேட்பதற்குக் கூட மனமில்லாதவராக அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை உதாசீனப்படுத்தினார்.

அந்த நேரத்தில் தான் எங்களுடைய உணர்வுகளை புரிந்தவராக, எங்களின் கோரிக்கைகளின் பால் உள்ள நியாயங்களை உணர்ந்தவராக தமிழ்நாடு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நீங்கள் எங்கள் கூட்டங்களுக்கும், இயக்க நடவடிக்கைகளுக்கும், மாநாடுகளுக்கும் வந்து எங்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் ஆட்சிக்கு வந்ததும் அரசு ஊழியர் ஆசிரியர் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்தீர்கள்.

எங்களின் நம்பிக்கைகள் மேலும் உறுதிபடும் வகையில் 2021 தேர்தல் அறிக்கையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான உரிமைகளும் சலுகைகளும் திமுக ஆட்சிக்கு வந்ததும் வழங்கப்படும் என்றும் குறிப்பாக புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்பட்டு பழைய பயனளிப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் உறுதி அளித்தீர்கள். அதன்மூலம் எங்களின் நம்பிக்கையை அசைக்கமுடியாத உறுதியான நம்பிக்கையாக மாற்றினீர்கள்.

ஆனாலும் இத்தனையும் செய்த நீங்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சரான பின்னர் உங்கள் மனநிலையை மாற்றிக்கொண்டு இரண்டரை ஆண்டு காலமாக ஒரு கோரிக்கையைக் கூட நிறைவேற்ற மனமில்லாமல் இருப்பதானது எங்களை அதிர்ச்சியடைய வைத்திருப்பதாக உணர்கிறோம். கொரோனா காலகட்டம் என்றீர்கள்; நாங்கள் மௌனம் காத்தோம். சில காலம் கடந்து நிதிநிலை சரியில்லை என்றீர்கள்; அதையும் ஏற்றுக்கொண்டோம். எங்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, 'சொன்னவை அனைத்தும் நினைவில் உள்ளது. நிச்சயம் அவை நிறைவேற்றப்படும்' என்றீர்கள். இறுகிய மனதோடு காத்திருந்தோம்.

எங்களின் பொறுமை சென்னையில் பெய்த பெருமழையைவிட, தூத்துக்குடியில் கொட்டிய மழைநீரைவிட அதிகப்படியானது தான். மழை பெய்து கொண்டே இருந்தால் அணைகளின் நீர்மட்டம் உயரும் தான். அணைகளை திறக்காமல் மழை பெய்து கொண்டே இருந்தால் மதகுகள் உடையும், அணைகள் கரைபுரண்டு விடும் என்பதை தங்களுக்கு சொல்லிப் புரிய வைக்க வேண்டியதில்லை. தற்போது ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் அனைவரும் முட்டிமோதி அணைகளை உடைக்கும் அழுத்தத்தின் மன நிலையில் உள்ளோம்.

நாங்கள் இரண்டுமுறை போராட்டங்களை முன்னெடுத்தபோது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தமிழக அரசின் பிரதிநிதிகளாக எங்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி முதல்வர் கூடிய விரைவில் உங்கள் கோரிக்கைகளை சரிசெய்வார்.' என்று சொல்லிச் சென்றார்கள். நாங்களும் நம்பிக்கை இழக்காமல் காத்திருந்தோம். ஆனாலும் இதுவரையிலும் எங்கள் கோரிக்கைகள் ஒன்றுகூட நிறைவேற்றப்படாமல் அரசாங்கத்தின் இரும்பு அறைகளுக்குள் பூட்டி வைக்கப்பட்டிருப்பது ஒவ்வொரு அரசு ஊழியர், பணியாளர், ஆசிரியரிடத்தில் தாங்கள் சொல்லியிருந்த உறுதிப்பாடு மற்றும் வாக்குறுதிகளின் மீது வெறுப்பையும், நம்பிக்கை இழப்பையும், கோபத்தையும் அதிகப்படுத்தியுள்ளது. அதனால்தான் இந்தமுறை எக்காரணம் கொண்டும் எங்கள் போராட்டங்களை தள்ளி வைக்கவோ, காலம் தாழ்த்தவோ, சமாதானத்திற்கு உட்படவோ கூடாது என்ற முடிவின் அடிப்படையில் 2023 டிசம்பர் 28ம் ஆம் தேதி கோட்டை முற்றுகைப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

எல்லை கடந்த பொறுமைக்கு பின்னர் எடுக்கப்பட்டிருக்கும் இந்த முடிவில் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் போராட்டத்தை விலக்கிக் கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை' என்ற தீர்மானத்தை ஆசிரியர்களும், ஊழியர்களும், பணியாளர்களும் தங்கள் நெஞ்சில் வரித்துக் கொண்டுள்ளனர்.

எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மௌனம் கலைத்து, சொன்ன சொல்லை, கொடுத்த உறுதிப்பாட்டை, வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் கேட்டுக் கொள்கிறோம். எல்லை கடந்த பொறுமைகளுக்கு பின்னரே இந்த போராட்டத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பதையும், தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளில் சிலவற்றையேனும் நிறைவேற்றாமல் போராட்டங்களின் வீரியம்

குறைந்துவிடும் என்பது சாத்தியமில்லாத நிகழ்வாகியிருக்கிறது என்பதையும் தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வர விழைகிறோம். எனவே எப்போதும் போல் அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை அழைத்துப்பேசி சரிக்கட்டி விடலாம் என்ற எண்ணத்தை மாற்றிக்கொண்டு எங்களின் முக்கிய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட மாண்புமிகு முதல்வர் ஆணையிட வேண்டும், ஆவன செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

- 1.4.2003க்குப் பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினைக் கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே அமல்படுத்திட வேண்டும்.
- காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பு ஒப்படைப்பு, உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- இடைநிலை ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு, உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டு வரும் அநீதி களையப்பட வேண்டும்.
- முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், ஆகியோருக்கான ஊதிய முரண்பாட்டினைக் களைய வேண்டும். கல்லுhரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணிமேம்பாடு (ஊஹளு) ஊக்க ஊதிய உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.
- சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நுhலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஆசுக்ஷ செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.
- அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
- 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள்-அரசுப் பணியாளர்கள் ஆகியோருக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- 2002 முதல் 2004 வரை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் பணிக் காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப் படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும்
- சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை முறைப்படுத்த வேண்டும்.
- உள்ளாட்சி அமைப்புகளிலும் பல்வேறு அரசுத்துறைகளிலும் தனியார் முகமை மூலம் பணியாளர்களை நியமனம் செய்வதை உடனடியாக தடை செய்திட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளில் முக்கியமான சிலவற்றையேனும் இந்த கோரிக்கை சாசனம் தங்கள் கைகளுக்கு கிடைத்திருக்கும் இத்தருணத்திலேயே நிறைவேற்றிட உரிய ஆணைகள் பிறப்பித்திடுமாறு தங்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம். ●

கருத்துரை

# குடிமக்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்



**டி.ஒய். சந்திரசூட்**

தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றம்

இந்தியாவுக்கான அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது 75-ஆவது ஆண்டை நெருங்கி வரும் நிலையில், கடந்த 70 ஆண்டுகளாக உச்சநீதிமன்றம், ‘மக்கள் நீதி மன்றமாக’ விளங்கி வருகிறது.

தனிப்பட்ட சுதந்திரம் முதல் கொத்தடிமைத் தொழிலாளர்கள், பழங்குடியினரின் நில உரிமைகள், பணியிட பாலியல் துன்புறுத்தல் மற்றும் கையால் சுத்தம் செய்தல் போன்ற சமூகத் தீமைகளைத் தடுப்பது போன்ற பரந்த சமூகக் கவலைகள் வரையிலான பிரச்சனைகளை எழுப்பும் வழக்குகளில் ஆயிரக்கணக்கான குடிமக்கள் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். உச்சநீதிமன்றத்தை நாடுகின்றனர். எந்தவொரு குடிமகனும் இந்தியத் தலைமை நீதிபதிக்கு எழுதுவதன் மூலமும் அரசியலமைப்பு இயந்திரத்தை இயக்கக் கூடிய உலகின் ஒரே நீதிமன்றமாக நமது நீதிமன்றம் இருக்கிறது என்று நிச்சயமாக கூறலாம். காகித யுகத்தின் போஸ்ட்கார்டுகளில் இருந்து டிஜிட் டல் யுகத்தில் ஒரு எளிய மின்னஞ்சல் வரை- சில சமயங்களில் ஒரே நாளில் கூட அவசர வழக்குப் பட்டியலுக்காக உச்சநீதிமன்றத்தை நாட முடியும்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் உதவியுடன், உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை பிராந்திய மொழிகளில் மொழி பெயர்க்க ஒரு முடிவை எடுத்தது. நவம்பர் 25, 2023 வரை, உச்ச நீதி மன்றம் அதன் முதல் அமர்வு தேதியிலிருந்து 36 ஆயிரத்து 068 தீர்ப்புகளை ஆங்கிலத்தில் வழங்கியுள்ளது. இது தவிர, 9 ஆயிரத்து 276 தீர்ப்புகள் பஞ்சாபி, தமிழ், குஜ ராத்தி, மராத்தி, தெலுங்கு, ஒடியா, மலையாளம், வங்காளம், கன்னடம், அசாமி, நேபாளி, உருது, கரோ, காசி மற்றும் கொங்கணி உள்ளிட்ட பிற இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு நமது குடிமக்களிடமிருந்து நம்மைத் தூர விலக்குவது அல்ல, மாறாக குடிமக்களை சம பங்காளிகளாக அரவணைத்து செல்வதை உச்சநீதிமன்றம் தனது செயல் முறையாக கொண்டிருக்கிறது. அரசியலமைப்பு நிறுவனங்கள் தங்களுக்காக வேலை செய்கின்றன என்பதை குடிமக்கள் உணர வைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் உச்ச நீதிமன்றம் மேற்கொண்டு வருகிறது.

உச்சநீதிமன்ற வளாகத்தில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் சிலை திறக்கப்பட்டுள்ளது. இது நீதிமன்றத்தை அணுகுவதற்கான உரிமையைக் குறிக்கிறது, உச்ச நீதிமன்றத்தை அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என்று பாபாசாகேப் அம்பேத்கர் வர்ணித்தார். அந்த வகையில், தனிநபர்கள் நீதிமன்றத்திற்கு வருவதற்குப் பயப்படவோ அல்லது அதை கடைசி முயற்சியாகப் பார்க்கவோ கூடாது. குடிமக்கள், வர்க்கம், ஜாதி அல்லது மதம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், தங்கள் உரிமைகளைச் செயல்படுத்த ஒரு நியாயமான மற்றும் பயனுள்ள மன்றமாக நீதிமன்றம் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

சில சமயங்களில், ஒரு கூட்டு முடிவாக நாம் வழக்கை அனுமதிக்க முடியாத சிக்கல் இருக்கலாம். ஆனால் அரசியலமைப்பு, நமது அரசியல் வேறுபாடுகளை, நிறுவப்பட்ட ஜனநாயக நிறுவனங் கள் மற்றும் செயல்முறைகள் மூலம் தீர்க்க அனுமதிப்பது போல, நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் மூலம் நமது பல கருத்து வேறுபாடுகளைத் தீர்க்கவும் நமது நீதிமன்ற அமைப்பு உதவுகிறது. இந்த வகையில், நாட்டில் உள்ள ஒவ்வொரு வழக்கும், ஒவ்வொரு நீதிமன்றமும் அரசியலமைப்பு நிர்வாகத்தின் நீட்டிப்பாகும். அந்த வகையில் உச்ச நீதிமன்றத்தின் கதவுகள் குடிமக்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்.

*(அரசியலமைப்பு தினத்தில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் பேசிய பேச்சின் சுருக்கம்)* ●

# நீங்கள் கலகக்காரர்கள்... எப்போதும் கலகம் செய்யுங்கள் -பிடல் காஸ்ட்ரோ

**(2005 நவம்பர் 17 அன்று ஹவானா பல்கலைக்கழகத்தில் ஆற்றிய மிக நீண்ட உரையின் சுருக்கம்)**

**- தமிழில்: எஸ்.பி.ராஜேந்திரன்**

புரட்சிகரமான எனது இளைய தோழர்களே! புரட்சிகரச் சிந்தனைகளுக்கு வித்திட்ட இந்த மாபெரும் ஹவானா பல்கலைக்கழ கத்தில் படிப்பதற்காக நான் நுழைந்து 60 வரு டங்கள் ஆகின்றன. எனது பழைய நினைவு களில் மூழ்கிப்போகிறேன். அது புதிய புதிய சிந்த னைகளை தேடித் திரிந்த காலம். அனைத்தை யும் கற்றுக் கொள்ளும் ஆவலுடன் படித்த காலம். எதையும் கேள்வி கேட்கிற, கலகம் செய்கிற சிந்தனை கொளுந்து விட்டு எரிந்த காலம். எங்களது கண்கள் நிறையக் கனவுகள் இருந்தன. ஆனால் அவற்றை புரட்சிகரமான கனவுகள் என்று வர்ணிக்கமுடியாது; ஆனால் உறுதியாகச் சொல்வேன், அநீதிக்கு எதிராக கோபாவேசம் பொங்கி எழுந்த கனவுகள்.

**சிலிர்க்க வைத்த பொறுப்பு**

விளையாட்டில் தீவிரமாக இருந்தேன். மலையேறுவதில் தீவிரமாக இருந்தேன். சாரணர் இயக்கத்தில் தளபதி போல செயல்படும் வாய்ப்பு கிட்டியது. மேல்நிலைப்பள்ளியில் படித்த போது, நல்ல மதிப்பெண்கள் பெற்றேன். இன்றைக்கு உலகில் சிலர் எனக்கு நல்ல மதிப்பெண் வழங்க மறுக்கிறார்கள் (சிரிக்கிறார்). பிறகு, ஒரு புரட்சிகரப் படையின் கமாண்டர் ஆனேன். அந்தப் படையை உருவாக்கும் போது, கமாண்டர் என்பதைத் தவிர வேறில்லை. 82 பேர் கொண்ட அந்தச் சிறிய படைக்கு பல கமாண்டர்களை உருவாக்கினோம். அதனால் என்னை தலைமைக் கமாண்டர் என்றார்கள்.

1956 டிசம்பர் 2ஆம் தேதி, கிரான்மா என்ற சாண்டியாகோவில் நாங்கள் வந்து இறங்கிய போது, அந்த மகத்தான கொரில்லா படையின் தலைமைக் கமாண்டர் என்ற பொறுப்பு என்னை சிலிர்க்க வைத்தது.

**நினைத்துப் பார்க்கிறேன்....**

இன்று உங்கள் முன்பு பேசும்போது, இதைப் பகிர்ந்து கொள்ளாவிட்டால், வேறு ஒரு சிறந்த தருணம் கிடைக்காது என்றே கருதுகிறேன். சிறுவயதிலிருந்தே ஒரு கலகக்காரனாக வளரும் வாய்ப்பு எனக்கு கிடைக்கப் பெற்று விட்டது. நான் ஒரு தொழில்முறைக் கலகக்கார னாகவே வளர்ந்திருக்கிறேன்.

**கலகக்காரர் என்றால்...**

‘கலகக்காரர்’ என்றாலே இலக்கு இல்லாதவர்கள் என்று பொதுப் புத்தியில் ஏற்றப்பட்டிருக்கிறது. ஆனால் கலகம் செய்வதற்கு பல காரணங்கள் வேண்டும். நான் கலகக்காரனாக வளர்ந்ததற்கு பல கார ணங்கள்- பல லட்சியங்கள் இருந்தன. இன்று வரையிலும் நான் கலகக்காரனாகவே இருப்ப தற்கு பெருமைப்படுகிறேன். ஏனென்றால், நான் கலகக்காரனாகவே தொடருவதற்கு இன்னும் ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. போராட்டங்களிலிருந்து ஒவ்வொரு நாளும் கற்றுக் கொண்டிருக்கிறேன். நான் நேசிக்கும் இந்த நாட்டை, இந்த உலகை மேலும் மேலும் சிறந்த முறையில் புரிந்து கொள்வதற்காக கற்றுக் கொண்டே இருக்கிறேன். உலகமயம் ஆக்கப்பட்டுவிட்ட

இந்த புவிக் கோளம் எப்படிப்பட்ட இலக்கை நோக்கி கால வெளியில் பயணப்படுகிறது என்பதை கற்றுக் கொள்ள முயற்சிக்கிறேன்.

**ஒரு துளி தான்...**

இந்தப் பூவுலகம் அதன் வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. பூவுலகின் வரலாறு மிகமிகச் சிறியது. இப்பூவுலகில் உயி ரினங்கள் நாகரீகமாக வாழக் கற்றுக் கொண்டதே அதிகபட்சம் சுமார் 5 ஆயிரம் வரு டங்களுக்கு முன்புதான். அதற்கு முன்னால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பரிணாம வளர்ச்சி நடந்திருக்கிறது. இப்பூவுலகில் ஆண்டா ண்டு காலமாக பிறந்து வளர்ந்த கோடிக் கணக்கான உயிரினங்களில் ஒரு துளி உயிரிதான் நாம்.

நான் ஏன் இப்போது இதைப்பற்றி பேசு கிறேன்? ஏனென்றால், பூவுலகின் உயிரிகள் உண்மையிலேயே மிகப்பெரும் அச்சுறுத்த லில் சிக்கியிருக்கின்றன. இந்தப் பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால், பூவுலகின் ஒட்டுமொத்த உயிரிகளும் அழிவதை யாராலும் தடுக்க முடியாது.

நம்மைப் போன்ற உயிரினங்கள் இந்த உலகில் தொடர்ந்து வாழ முடியுமா என்ற பிரச்சனையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர்கள் கூட விவாதித்திருக் கிறார்கள். ஒருநாள் இந்த உலகம் அழிந்து விடும் என்று அப்போதே அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

உண்மையில், மார்க்சிஸ்ட்டுகளும் அதைத் தான் சொல்கிறோம். மாமேதை ஏங்கெல்ஸ் எழுதிய ‘இயக்கவியல்’ என்ற நூலை நான் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். அவர் சொல்கிறார், ஒரு நாள் சூரியன் இருண்டுவிடும்; இந்த உலகிற்கே ஒளியை அள்ளித்தரும் அந்த மாபெரும் நட்சத்திரம் நெருப்பாக எரிந்து கொண்டிருப்பதற்கு உதவுகிற எரிபொருள் தீர்ந்துவிட்டால் சூரியனே இருக்காது என்கிறார். என் மனதில் ஒரு கேள்வி எழுந்தது; அந்தக் கேள்வி உங்கள் மனதிலும் எழலாம்; வேறொரு சூரியக் குடும்பத்திற்கு நம் உயிரினங்கள் எல்லாம் இடம்பெயர்வதற்கு ஏதேனும் வாய்ப்பு கிடைக்குமா, சாத்தியமாகுமா என்ற கேள்வி தான் அது.

**எல்லையற்ற பிரபஞ்சம்**

மார்க்சிஸ்ட்டுகளும் விஞ்ஞானிகளும் ஒரே பாதையில் சிந்திப்பார்கள். அதிலும் புரட்சி யாளர்களான மார்க்சிஸ்ட்டுகள், விஞ்ஞானி களை விட இன்னும் வேகமாகச் சிந்திப்பார்கள். வேறொரு சூரியக் குடும்பத்திற்கு நாம் எல்லோ ரும் இடம்பெயர முடியுமா; அந்த சூரியக் குடும்பத்தில் நம்மைப் போன்றே உயிரினங்கள் வாழ்ந்து கொண்டிருந்தால் என்ன செய்வது? இன்று நமக்கு எட்டியுள்ள அறிவின்படி, தற்போ தைய நமது சூரியக் குடும்பத்திலிருந்து நான்கு ஒளி ஆண்டுகள் தொலைவில் ஒரு சூரியன் இருக்கிறது; அதற்கும் அப்பால் நூற்றுக் கணக்கில், பல நூற்றுக்கணக்கில், ஆயிரக் கணக்கில், லட்சக்கணக்கில் சூரியன்கள் இருக் கின்றன. பிரபஞ்ச வெளி எல்லையற்றது. முடிவற்றது.

நாம் வாழும் பூமியில், ஒட்டுமொத்த உயிரி னங்களின் வாழ்க்கை சில டிகிரிகள் வெப்ப நிலைக்கு இடையில்தான் இருக்கிறது. புவியி லுள்ள நீரின் வெப்பநிலை சற்றுக் கூடினால் போதும்; அதுவே 60 டிகிரியாக கூடிவிட்டால், ஒட்டுமொத்த புவியின் உயிரினங்களும் வெந்து மடிவதற்கு 20 நொடிகளே அதிகம். வெப்பத்திற்கு பதிலாக குளிர் அதிகரித்தாலும் புவியின் மரணத்தை எவராலும் தடுக்க முடியாது.

**பறிக்கப்பட்ட 5 கோடி உயிர்கள்**

உயிரினங்களின் வாழ்க்கையைப் பற்றி நாம் பேசுகிறோம். நமது பல்கலைக்கழகங்கள் எல்லாம் இதைப் பற்றி பேச வேண்டும். ஒவ் வொரு இளைஞனும் ஒவ்வொரு மாணவனும் இதைப் பேச வேண்டும். ஏனென்றால், நாம் அழிவதற்குப் பிறக்கவில்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் அழிவை மட்டுமே முன்னிறுத்துகிற பயங்கரம் நம்மைச்

சூழ்ந்திருக்கிறது. நான் படித்து வளர்ந்த காலக் கட்டத்தில் நடந்த யுத்தங்கள் சுமார் ஐந்து கோடி உயிர்களை பறித்துவிட்டன.

இந்த விசயங்களை ஒவ்வொரு நாளும் நான் இளைய தலைமுறையுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். என்னைப் பார்க்க வருகிற இளைஞர்களிடம், மாணவர்களிடம், மருத்து வர்களிடம் இடைவிடாமல் பேசிக் கொண்டி ருக்கிறேன். இந்த உலகிற்கு நிறைய மருத்து வர்கள் தேவை. நான் பெருமிதத்தோடு சொல்வேன். உலகிலேயே பிற நாடுகளுக்கு அதிகமான மருத்துவர்களை அனுப்பிய பெருமை கியூபாவைத் தவிர யாருக்கும் சொந்த மில்லை. வலியிலும் வேதனையிலும் துடிக்கிற மனிதர்களைக் காப்பதை விட இந்த சிறிய பூமியில் வேறு என்ன முக்கியம்?

ஆனால் இந்த சிறிய பூமி, மனிதர்கள் மீது அக்கறையற்று இருக்கிறது. கோடிக்கணக் கான மனிதர்கள் ஒருபுறம் உழைத்துக் கொட்டுகிறார்கள்; அவர்களது உழைப்பினைச் சுரண்டி, மறுபுறம் டிரில்லியன் டாலர் கணக்கில் இராணுவ வியாபாரம் - மரண வியாபாரம் நடக்கிறது. போர்கள் நடத்தப்பட்ட வண்ணம் உள்ளன. லட்சக்கணக்கான மனிதர்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். கோடிக்கணக் கானவர்கள் கைகளையும், கால்களையும் இழந்து துடிக்கிறார்கள்.

நாம் இன்று வாழும் உலகம் இப்படித்தான் இருக்கிறது. அது முழுவதும் நல்லவிதமாக இல்லை. நீதி நிறைந்ததாக இல்லை. சுரண்ட லும் கொடூரங்களும் நிறைந்ததாக உள்ளது. குழந்தைகளைக் கூட இந்த உலகம் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது.

**காட்டுமிராண்டிகளின் பேரரசு**

என்ன உலகம் இது? 70க்கும் மேற்பட்ட நாடு கள் காட்டுமிராண்டிகளின் பேரரசில் சிக்கித் தவிக்கின்றன. காட்டுமிராண்டிகளின் பேரரசு உலகின் ஒவ்வொரு மூலையிலும் ஆயுதங்களை நிலைநிறுத்தி, மனிதர்களைக் கொல்லும் தொழில்நுட்பங்களை உருவாக்கிக் கொண்டி ருக்கிறது. நூற்றுக்கணக்கான இராணுவத் தளங்கள் மனிதர்களின் உயிர்களைக் குடிக்க காத்திருக்கின்றன. இந்தப் போர் வெறியும், ஆயுத வெறியும் இன்னும் 30 வருடங்கள் நீடித் தால், உலகின் பெரும்பாலான உயிரிகள் அழிந்து விடும். இன்னும் 30 வருடங்களில் உலகம் முழுவதும் இருக்கிற பெட்ரோலிய வளம் கொஞ்சம் கொஞ்சமாக வறண்டு விடும். இன்றைய நிலையில், உலகின் மொத்த எண்ணெய் வளத்தில் 80 சதவீதம் மூன்றாம் உலக நாடுகளிடம் உள்ளன. காட்டுமிராண்டிகளின் பேரரசுக்கு (அமெரிக்கா) அந்த எண்ணெய் தேவைப்படுகிறது. காட்டுமிராண்டிகளின் பேரரசு அந்த எண்ணெய்க்காக மக்களைக் கொல்லத் தயங்காது. காட்டுமிராண்டிகளின் பேரரசிடமிருந்து, மனிதர்களை, இந்த பூமியை காப்பாற்ற வேண்டியுள்ளது.

**எனது இளம் தோழர்களே...**

நான் இன்னும் நிறைய உங்களிடம் பேச வேண்டும். இது 1945 அல்ல. 1950 களில் இதே பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற போது, நில விய காலக்கட்டம் அல்ல. ஆனால், இந்தப் பல் கலைக்கழகத்தில் நுழைந்த தருணம் முதல் எழுந்த கலக உணர்வு, நீதிக்காக உரத்துக் குரல் கொடுக்கும் உணர்வு ஒருபோதும் மாறவில்லை. உலகெங்கிலும் உள்ள கலகக்காரர்களிடம் அந்த உணர்வு மாறவில்லை.

நான் இன்னும் கலகக்காரனாகவே இருக்கிறேன். நான் இன்னும் புரட்சியாளனாகவே இருக்கிறேன். ஏனென்றால், நான் மார்க்சிஸ்ட்டாக இருக்கிறேன். நான் லெனினிஸ்ட்டாக இருக்கிறேன். நான் ஒருபோதும் தலை வணங்கமாட்டேன். கலகக்காரர்கள் ஒருபோதும் தலை வணங்க மாட்டார்கள். கலகக்காரர்கள், எந்தவொரு காட்டு மிராண்டிப் பேரரசும் இந்த உலகை அழிக்க, கோடானுகோடி மக்களை அழித்தொழிக்க அனுமதிக்கமாட்டார்கள். எனது இளம் தோழர்களே, நீங்கள் கலகக்காரர்கள். உலகை காக்க எப்போதும் கலகம் செய்யுங்கள். ●

# சிஏஜி அறிக்கைகள் 2010-2023 ஒரு பார்வை

**- நமது நிருபர்**

தலைமை தணிக்கை கணக்கு அதிகாரி சிஏஜி அளிக்கும் தணிக்கை அறிக்கைகளை நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்வது பிரதமர் மோடி ஆட்சியில் வெகுவாகக் குறைந்துவிட்டது.

சராசரியாக, 2014-2018-ம் ஆண்டு காலகட்டத்தில் கிட்டத்தட்ட 40 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2015-ஆம் ஆண்டு மட்டுமே 53 அறிக்கைகள் தாக்க லாகியுள்ளது. 2019-2023-ஆம் ஆண்டு களில் ஒவ்வொரு ஆண்டும் 22 அறிக்கை கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2023- ஆம் ஆண்டில் இதுவரை ஒன்றிய அரசின் கணக்குகள் குறித்த 18 தணிக்கை அறிக்கைகள் மட்டுமே நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்படும் ஒன்றிய அரசு மீதான தணிக்கை அறிக்கைகள் சில ஆண்டுகளாக குறைந்து வருகின்றன.

ஆனால் கடந்த ஆறு ஆண்டுகளில் இருபது அல்லது அதற்கும் குறை வான அறிக்கைகளே தாக்கல் செய்யப் பட்டுள்ளன.

2010- 2023-ஆண்டுக்கு இடையில் தணிக்கைக்குழுவின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட ஒன்றிய அரசின் 400-க்கும் மேற்பட்ட தணிக்கை அறிக்கை களை பகுப்பாய்வு செய்ததன் மூலம் இந்த புள்ளிவிவரங்கள் வந்துள்ளன. 2023 ஏப்ரல், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று அறிக்கைகள் இன்னும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

உதாரணத்திற்கு, ரயில்வே துறை தொடர்பான 14 தணிக்கை அறிக்கைகள் கடந்த ஐந்தாண்டுகளில் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. சிவில் துறைகளைப் பொறுத்த வரை கடந்த ஐந்து ஆண்டுகளில் 34 தணிக்கை அறிக்கைகள் வெளியிடப் பட்டன. இதற்கு முந்தைய ஐந்தாண்டு கால த்தில் 42 அறிக்கைகள் வெளியிடப் பட்டுள்ளன.

பாதுகாப்புத்துறை தொடர்பான அறிக்கை 2017-ஆம் ஆண்டு முந்தையது. தி இந்தியன் எக்ஸ்பிரஸில் 2020-ஆம் ஆண்டு அறிக்கையின்படி, முன்னாள் தணிக்கை அதிகாரி ராஜீவ் மெஹ்ரிஷி கூறி யுள்ளார். (பாதுகாப்பு அறிக்கைகளை) யாரும் எளிதில் அணுகக் கூடாது என்பதற் காக செய்யப்பட்ட முடிவாகக் கூட இருக்கலாம்.

சிஏஜி என்பது இந்திய தணிக்கை மற்றும் கணக்கு துறைக்கு தலைமை வகிக்கும் ஒரு அரசியலமைப்பின் அதிகாரம் பெற்ற அமைப்பாகும். இந்த இரண்டு துறைகளும் இந்தியாவின் உச்ச தணிக்கை நிறுவனம் என அழைக்கப்படுகின்றன.

2021-22-ஆம் ஆண்டு நிலவரப்படி, தணிக்கை மற்றும் கணக்கியல் துறையில் 41,675 பணியாளர்கள் பணியில் இருந்தனர். 2013-14-ஆம் ஆண்டு 48,253 பேர் பணியில் இருந்துள்ளனர்.

2014-15-ஆம் ஆண்டு 789 ஆக இருந்த ஐஏ மற்றும் ஏஎஸ் (IA&AS) அதிகாரிகளின் எண்ணிக்கை 2021-22-ஆம் ஆண்டு 553 ஆகக் குறைந்துள்ளது. தணிக்கை மற்றும் கணக்குத்துறை ஊழியர்களின் எண்ணிக்கை 2013-14 ஆம் ஆண்டு 26,000 க்கும் அதிகமாக இருந்து 2021-22 ஆம் ஆண்டு அது 20,320 ஆக குறைந்தது.

தொடர் முயற்சிகள் காரணமாக, காலி யிடப் பணியிடங்கள் ஓரளவு குறைந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு காரணமாக, காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும் என்று எதிர்பார்ப்பதாக சிஏஜி அதிகாரி ஒருவர் கூறினார்.

ஒன்றிய அரசின் பட்ஜெட்டின் மொத்த செலவில் ஒரு பங்காகக் கருதப்படும் இந்திய தணிக்கை கணக்குத்துறைக்கு (IA&AD) ஒதுக்கப்பட்ட நிதியும் குறைக்கப்பட்டுள்ளது. 2024-ஆம் ஆண்டு கணக்குத்துறைக்கான தணிக்கை மற்றும் கணக்கியல் துறைக்கான ஒதுக்கீடு 0.13 சதவீதம் மட்டுமே. ஆனால், 2017-ஆம் ஆண்டு 0.19 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தது.

ஒட்டுமொத்தத்தில் இந்தத் துறைக்கு 2017-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.3,780 கோடி. 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.5,806 கோடியாக அதிகரித்துள்ளது. ஆனால், ஒன்றிய அரசின் மொத்த பட்ஜெட் செலவில் இது குறைவு.

இந்த தணிக்கை அறிக்கைகளுக்குப் பிறகு, புதுதில்லியில் உள்ள கணக்கியல் தணிக்கைத்துறை அலுவலகத்தால் “அனைத்துக் களப்பணிகளையும் நிறுத்த” “வாய்மொழி உத்தரவு” பிறப்பிக்கப்பட்ட தாக ‘தி வயர்’ செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், இதுபோன்ற வாய்மொழி உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை என்று சிஏஜி அலுவலகம் மறுத்துள்ளது. நாடு முழுவதும் களத் தணிக்கைக் குழுக்கள் வழக்கம் போல் பணியாற்றி வருகின்றன எனத் தெரிவித்துள்ளது. என்று அது கூறியது.

நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்ட சிஏஜியின் 12 அறிக்கைகள், ஒன்றிய அர சின் அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் நிதி மற்றும் பிற முறைகேடுகள் குறித்து எதிர்க்கட்சிகள் கேள்விகளால் துளைத்தெடுத்தன. இதில் பாஜக வசமாக சிக்கிக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

●

# ரத்ததான முகாம் உசிலம்பட்டி வட்டக்கிளை மதுரை மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உசிலம்பட்டி வட்டக்கிளை மற்றும் உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை இணைந்து மாபெரும் ரத்ததான முகாம் உசிலம்பட்டி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத்துணைத்தலைவர் மொ. ஞானத்தம்பி மாவட்டத்துணைத்தலைவர் த.மனோகரன் மாவட்ட இணைச்செயலாளர் சி.பெரியகருப்பன் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. கண்ணன் வட்டக்கிளை தலைவர் பி. அய்யங்காளை வட்டக்கிளை பொருளாளர் சி.இந்திராணி, நிர்வாகிகள் M.ஆசை, அனிதா, விஜயலட்சுமி, அருண்பாண்டி மற்றும் உசிலம்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை ரத்த வங்கி மருத்துவர் (பொறுப்பு) செவிலியர் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

தோழமையுடன் P.அய்யங்காளை வட்டக்கிளை தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் - உசிலம்பட்டி வட்டக்கிளை மதுரை மாவட்டம்.

●

கட்டுரை

# புத்தக வாசிப்பு: வரலாற்றை புரட்டிப் போடும்!

(திண்டுக்கல் புத்தகத் திருவிழாவில் வெ.இறையன்பு அவர்கள் பேசியதிலிருந்து)

**- தொகுப்பு: இலமு**

ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது ஒவ்வொரு வரியை படிக்கிறபோது அது இதயத்தில் ஏற்படுத்துகிற ரச வாதம், கண்களில் ஏற்படுகிற வெளிச்சத்தில் தெரியும். ஒரு புத்தகத்தை வாசித்து முடிக்கும் போது இன்னும் கொஞ்சம் வளர்ந்திருக்கிறோம் என்று உணருவோம். இன்னும் கொஞ்சம் அறிவு பெற்றிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் ஆற்றல் பெற்றிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் வெளிச்சம் பெற்றிருக்கிறோம். அது தான் புத்தகம் செய்கிற மாற்றம். புத்தகங்களை வாசித்த வர்கள் வரலாற்றை புரட்டிப் போட்டுள்ளனர் என்று சரித்திரத்தின் ஏடுகளை படித்தவர்களுக்கு தெரியும்.

நாம் மகாத்மா காந்தியடிகளை போற்றி புகழ் கிறோம். அவர் இந்தியாவிற்கு மட்டும் வெளிச்சத்தை காண்பித்தவர் அல்லர். அவரால் வெளிச்சம் பெற்ற வர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். அவரை முன்மாதிரியாக வைத்து தான் மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்காவில் ஆப்பிரிக்க மக்களுக்காக போராடி னார். தன்னுடைய வழிகாட்டி என்று குறிப்பிட்டார். இன்று அமெரிக்காவில் உள்ள ஆப்பிரிக்க மக்கள் அனைவருமே மகாத்மா காந்தியடிகளின் பெயரைக் கேட்டால் எங்கள் தலைவருக்கு வழிகாட்டி என்று சொல்வார்கள். நெல்சன் மண்டேலாவுக்கு வழிகாட்டி யாக இருந்தவரும் காந்தியடிகள் தான். அவருடைய கோட்பாடுகளை உலகமெங்கும் படித்து பாராட்டி தபால் தலை வெளியிட்டு அவருக்கு சிலை வைத்து மகிழ்ந்தவர்கள் எண்ணற்றோர். அந்த மகாத்மா காந்தி யடிகள், மகாத்மாவாக ஆவதற்கு அவர் வாசித்த நூல்கள் தான் காரணம். ஜான் ரஷ்கின் எழுதிய கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற நூலை காந்தி படித்தார். அந்த நூல் தான் முதல் விதையை அவர் நெஞ்சிலே தூவியது. இன்று சுற்றுச்சூழலியல் அறிஞர்கள் அனைவருமே ஜான்ரஷ்கின் போன்றோரை, வேர்ட்ஸ் வொர்த் போன்றோரை, கீட்ஸ் போன்றோரை இயற்கையை போற்றுவதற்கான முன்னோடிகள் என்று குறிப்பிடு கின்றனர். உலகம் முழுவதும் உள்ள சுற்றுச்சூழல் இயக்கத்தைப் பற்றி ஒரு புத்தகத்தை வாசித்தேன். அதில் முன்னோடிகளாக மகாத்மா காந்தியடிகளையே குறிப்பிடுகிறார்கள். அவருடைய பொருளாதாரம் இயற்கையை சுரண்டாமல் இருப்பதாக இருந்தது என்று குறிப்பிடுகிறார்கள்.

காந்தி, டால்ஸ்டாய் எழுதிய ‘கடவுளின் அர சாங்கம் உன்னிடம் இருக்கிறது’ என்ற புத்தகத்தை வாசித்தார். அது தான் வன்முறையற்ற போராட்டங் களை நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணத்தை அவ ருக்கு ஏற்படுத்தியது. அவர் அதோடு நிற்கவில்லை. ஹென்றி தோரோ எழுதிய ‘ஒத்துழையாமை’ என்ற கட்டுரையை படித்தார். அது தான் ‘ஒத்துழையாமை இயக்கம்’ என்ற ஒன்றின் மூலம் ஆள்பவர்களின் மன சாட்சியை பிடித்து உலுக்க முடியும் என்கிற எண்ணத்தை ஏற்படுத்தியது. அவர்களுடைய எண்ணங்களை யெல்லாம் நாம் உலுக்குவதற்கு மட்டுமல்ல; அதன் மூலம் அரசாங்கத்தையே உலுக்குவதற்கும் முடியும் என்பதை ‘ஒத்துழையாமை’ என்ற அந்த கட்டுரையை படித்து தெரிந்துகொண்டார். இப்படி மகாத்மா காந்தி யடிகள் வாசித்த பல புத்தகங்கள் தான் அவரை மகத்தான மனிதராக ஆக்கியது. அவருடைய மனத்திலே பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

காரல் மார்க்ஸ் ஹெகலைப் பற்றி படித்தார். அபேத வாதத்தை கற்றுக்கொண்டார். பிரௌதான் எழுதிய ‘வறுமையின் தத்துவம்’ என்ற நூலை படித்து விட்டு ‘தத்துவத்தின் வறுமை’ என்று பதிலுரையை எழுதி னார். ஏங்கெல்ஸ் எண்ணற்ற நூல்களை படித்தார். குடும்பம், அரசு தனிச் சொத்து என்கிற நூலை எழுதி னார். அம்பேத்கர் பல நூல்களை படித்தார். பிரிட்டிஷ் எழுத்தாளர் ஜான் டுவியினுடைய நூல்களை படித்து தன்னுடைய சித்தாந்தத்தை, கோட்பாட்டை வரையறை செய்து கொண்டார். இப்படி

எண்ணற்றோர் வாசித்த தால் வளம் பெற்றார்கள். இந்த பூமியையே வளமான ஒன்றாக மாற்றினார்கள். அவர்கள் வாசிக்காமல் இருந்திருந்தால் ஒரு சித்தாந்தத்தை - ஒரு கோட்பாட்டை, அவர்களால் ஒரு போதும் ஏற்படுத்திக் கொண்டி ருக்கிற முடியாது. சாதாரணமாக ஒரு கையாடலுக்காக சிறைக்குச் சென்ற ஓ.ஹென்றி என்பவர் தான் பல கதைகளை எழுதிய பெரிய எழுத்தாளரானார்.

சிறைச்சாலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தஸ்தாவஸ்கிக்கு ஏற்படுகிறது. தூக்குக் கயிற்றின் நுனியில் நின்று கொண்டிருக்கிறார். அந்த நேரத்தில் விடுதலை செய்தி வருகிறது. அவர் இருந்தது சைபீரியாவின் தனிமைச் சிறை. அந்த தனிமையிலே இருக்கிற போது, அவர் தான் என்ன எழுத வேண்டும் என்பதை மனத்திலே ஒத்திகை பார்த்து அவற்றை எழுதி முடித்துவிட்டார். சிறையிலிருந்து வெளிவந்தபின் நாவல்களாக எழுதித்தள்ளுகிறார். அவர் சொல்லச் சொல்ல தட்டச்சு செய்தார்கள். அதற்கு காரணம் ஒரு சிறைச்சாலை என்பது ஒருவருக்கு கல்விச் சாலையாகவும் இருக்க முடியும். அந்த சிறைச் சாலை யில் எழுதிய நூல்கள் தான் இன்றைக்கும் மகத்தான நூல்களாக வலம் வருகின்றன.

நெல்சன் மண்டேலா சிறைச்சாலையில் இருக்கும் போது தான் அவர் ஒரு திடமான மனிதராக மாறினார். 27 ஆண்டுகள் சிறையிலே இருந்த ஒரு மனிதன் 4 மணி நேரம் காய்கறித் தோட்டங்களில் தனது ஆற்றலை செலவு செய்து உடலை உறுதியாக வைத்துக்கொண் டார். உடலின் வலிமை முக்கியம். வாழ்க்கையை வாசிக்கிற எவனுக்குமே குறிப்புகள் தேவையில்லை, குறிக்கோள் மட்டும் தான் தேவை. நூறு ஆண்டுகள் வரலாற்றை நூறு பக்கங்களில் வாசிப்பதற்கு எவ்வளவு பேறு பெற்றிருக்க வேண்டும். ஒரு அற்புதமான ஒரு கவிதையை கவிஞன் எழுது வதற்கு ஓராண்டாகலாம். 10 ஆண்டு கள் ஆகலாம். அதை பத்தே நிமிடங்க ளில் நாம் படித்து முடித்துவிடுகிறோம். அதன் சாரத்தை உறிஞ்சி விடுகிறோம். எப்படி ஒரு மண் சலித்து சலித்து ஒரு தானியத்தை படைத்துக் கொடுக்கி றதோ அதைப் போல, எப்படி ஒரு பசு புல்லைத் தின்று தின்று பாலைத் தரு கிறதோ அதைப் போல நாம் அந்த எழுத்தாளன் சலித்து சலித்து தந்த அரு மையான அறிவை நுகர்கிறோம். அது தான் வாசிப்பதற்கான முதல் காரணம். நல்ல இலக்கியத்தை வாசித்த வன் வழியில் செல்லும் ஒரு மனி தனை கருணையோடு பார்க்கிறான். தடுமாறிக் கொண்டிருக்கிற ஒருவ னுக்கு கைகொடுத்து உதவுகிறான். விபத்தில் பாதிக்கப்பட்டவனை ஓடிச் சென்று காப்பாற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறான். அவன் ஒரு தொழு நோயாளியைக் கண்டால், 'அம்மா நான் இருக்கிறேன்' என்ற ஜெயகாந்தனின் சிறுகதை நினைவுக்கு வருகிறது. அடுத்த நிமிடம் அவன் மீது இரக்கப்படுகிறான். தன்னுடைய சக பயணி என்று அவனை நினைக்கிறான். இது தான் இலக்கியம் செய்கிற மாற் றம். இது தான் நூல் செய்கிற மாற்றம். நீங்கள் அறிவியலைப் படிக்கிற போது, இந்த உலகத்தைப் பார்க்கிற பார்வையே மாறிப் போகிறது. இந்த உலகத்தை சாதாரணமாக பார்ப்ப தற்கும், அறிவியலை படித்துவிட்டு பார்ப்பதற்கும் உள்ள வித்தியாசம் வேறு. ஸ்கார்ச் எர்த் டெக்னிக் என்ற ஒன்றை பிரஞ்சுப்படை ரஷ்யாவிற்குள் புகுந்த போது ரஷ்யர்கள் பயன்படுத்தி னார்கள். நெப்போலியன் படைகள் தோல்வியடைந்ததற்கு அது காரணம். எதிரிகளே இல்லை என்று முன்னேறிச் சென்றார்கள். ரஷ்யர்கள் வீடு களை காலி செய்து பின்னேறிக் கொண்டிருந்தார்கள். பயிர்களை யெல்லாம் அழித்துவிட்டார்கள். உணவு கிடைக்கவில்லை. குதிரைகள் மாண் டன. படைவீரர்கள் மாண்டார்கள். நெப்போலியனின் படை தோல்வி யடைந்தது அவன் வீட்டுக்கு திரும்பினான். காரணம் அறிவியல் படித்ததனால் ரஷ்யர்கள் பயன்படுத்திய யுக்தி. ஷேக்ஸ்பியர் 3 மணி நேரம் தான் தூங்குவார். விடிய விடிய எழுதுவாராம். நகராமல் எழுதிய ஐசக் ஆஷிமா போன்றவர்கள் உண்டு. 3 நாட்கள் தூங்காமல் ஒரே இடத்தில் அமர்ந்து உலக அரசியலமைப்புச் சட்டங்களை யெல்லாம் படித்து கரைத்து குடித்து கியூபாவின் அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்தவர் சேகு வேரா. அப்படிப்பட்ட வைராக்கியமான மனிதர்கள் படித்ததைப் போல இடை விடாமல் வாசிப்பது நல்லது. படிக்கப் படிக்க நீங்கள் பார்க்கிற மனிதர்கள் காந்தமாக உங்க ளோடு ஒட்டிக்கொள்வார்கள். வாசி யுங்கள், நீங்கள் வாழ்ந்ததற்கான அடையாளத்தை விட்டுச்செல்லுங்கள். வாசியுங்கள், மக்களை நேசியுங்கள். இந்த உலகத்தில் அன்பை விதைப் போம். அகிம்சையை விதைப்போம். மனித நேயத்தை வளர்ப்போம். மானுடத்தை மீட்டெடுப்போம். ●

கட்டுரை

# விவசாயிகளின் மனங்களில் வாழ்கிறார் எம்.எஸ்.சுவாமிநாதன்

– பி.சாய்நாத்
தமிழில் : ராஜசங்கீதன்

1925ஆம் ஆண்டு பிறந்து 2023ஆம் ஆண்டில் மறைந்த டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் இந்தியாவின் முன்னணி வேளாண் விஞ்ஞானி ஆவார். வேளாண் ஆய்வு, கொள்கை, திட்டமிடல் போன்றவற்றில் அவரின் பங்களிப்பு இருக்கிறது. விவசாயத்தின் வ்ளர்ச்சியை, அதிகரிக்கும் விளைச்சலை கொண்டு மதிப்பிடாமல், விவசாயிகளின் வருமானத்தை கொண்டு மதிப்பிட வேண்டுமென்றார் அவர். பெரும்பாலான இந்திய விவசாயிகளுக்கு தெரிந்தி ருக்கும் சில ஆங்கில வார்த்தைகளில் 'சுவாமிநாதன் ரிப்போர்ட்' அல்லது 'சுவாமிநாதன் கமிஷன் ரிப்போர்ட்' ஆகியவையும் நிச்சயமாக இருக்கும். அந்த அறிக்கை முன் வைக்கும் முக்கியமான பரிந்துரையும் அவர்க ளுக்கு தெரியும்: குறைந்தபட்ச ஆதார விலை (MSP) = ஒருங்கிணைந்த உற்பத்திச் செலவு + 50 சதவிகிதம் (C2 + 50 சதவிகிதம் என்றும் குறிப்பிடப்படும்). அரசாங்கத்தாலோ அதிகாரவர்க்கத்தாலோ அறி வியல் நிறுவனங்களாலோ மட்டும் நினைவு கூரப் படுபவர் அல்ல பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன். விவசாயிகளுக்கான தேசிய ஆணையத்தின் (NCF) அறிக்கையை அமல்படுத்தக் கோரும் கோடிக்கணக் கான விவசாயிகளின் மனங்களில் நிறைந்தவர்அவர். பெரிய பங்களிப்பும் தாக்கமும் ஏற்படுத்தக் கூடிய தேசிய விவசாயிகள் ஆணையம் (NCF) அறிக்கை களை 'சுவாமிநாதன் அறிக்கை' என்றுதான் இந்திய விவ சாயிகள் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் அந்த ஆணை யத்தின் தலைவராக அவர் இருந்தார்.

#### ஒரு மணி நேர விவாதம் கூட நடக்கவில்லை

ஆனால் அந்த அறிக்கைகளை இருட்டடிப்புச் செய்து, ஐக்கிய முற்போக்கு கூட்டணி, (UPA) மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி (NDA) ஆகிய இரு அரசாங்கங்களும் ஏமாற்றின. முதல் அறிக்கை டிசம்பர் 2004-ல் சமர்ப்பிக்கப்பட்டது. கடைசி அறிக்கை அக்டோ பர் 2006-ல் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அவற்றின் பொருட்டு நாம் கேட்கும் விவசாய நெருக்கடியை விவா திக்கும் நாடாளுமன்ற சிறப்பு அமர்வு என்பது நடக்கவே இல்லை. அந்தப் பிரச்சனை சார்ந்து ஒருமணி நேர விவாதம் கூட நாடாளுமன்றத்தில் நடக்கவில்லை. முதல் அறிக்கை வந்து 19 வருடங்கள் ஆகிவிட்டன. 2014ஆம் ஆண்டில் சுவாமிநாதன் அறிக்கையை யும் அதன் குறிப்பான அம்சமான குறைந்தபட்ச ஆதார விலை பரிந்துரையையும் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்தது மோடி அரசாங்கம். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் அவர்கள், அத்தகைய பரிந்துரையை அமல்படுத்தினால் சந்தை விலைகள் பாதிப்படையும் என வேகவேகமாக பிரமாணப் பத்திரத்தை அளித்தனர்.

#### எது விவசாய வளர்ச்சி?

ஒருவேளை அந்த அறிக்கைகள், விவசாயிகளு க்கு அதிகச் சார்புடன் இருப்பதாக ஐமுகூவும் தேஜ கூ-வும் கருதியிருக்கலாம். ஏனெனில் இரு அரசாங் கங்களும் இந்திய விவசாயத்தை கார்ப்பரேட்டுக்கு தாரை வார்க்க முயன்று கொண்டிருந்தன. சுதந்திரத்து க்கு பிறகு விவசாயத்தை ஆக்கப்பூர்வமாக அணுகிய ஒரே விஷயம் அறிக்கைதான். அதை அளித்த சுவாமிநா தனை பொறுத்தவரை, விவசாய வளர்ச்சியை விளைச்சல் அடிப்படையில் அல்லாமல் விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதை கொண்டே அளவிட வேண்டும்.

#### விவசாயிகள் தற்கொலையும் ஃபேஷன் நிகழ்ச்சியும்

தனிப்பட்ட முறையில் 2005ஆம் ஆண்டில், தேசிய விவசாயிகள் ஆணையத் தலைவராக இருந்தபோது அவரை விதர்பாவுக்கு வரும்படி அழைத்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்பகுதியில் நாளொன்றில் 6-8 விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலை இருந்தது. நிலவரம் கடுமையாக இருந்தது. அவற்றை பற்றி உங்க ளின் ஊடகங்களில் நீங்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. (2006ஆம் ஆண்டில், விவசாயம் நொடித்துப் போன ஆறு மாவட்டங்களில் வரலாற்றில் இல்லாத அளவுக்கு தற்கொலைகள் நேர்ந்து கொண்டிருந்தபோது ஆறு பேரளவுக்குதான் விதர்பாவை தாண்டி அச்செய்திக ளை எழுதிக்

கொண்டிருந்தனர். அதே சமயத்தில் மும்பையில் நடந்த லாக்மே ஃபேஷன் நிகழ்ச்சியை 512 முன்னணி பத்திரிகையாளர்கள் 100 தினசரி டிக்கெட்டு களை கொண்டு செய்திகளாக்கிக் கொண்டிருந்தனர். ஃபேஷன் நிகழ்ச்சியின் கருப்பொருள் பருத்தி என்பது தான் முரண்நகை. மாடல்கள் ஒய்யாரமாக பருத்தி ஆடைகளில் நடந்து வரும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கையில், அதை விளைவிக்கும் ஆண்களும் பெண் களும் குழந்தைகளும் ஒரு மணி நேர விமானப் பயண தூரத்தில் அளவில்லா எண்ணிக்கையில் தற்கொலை செய்து கொண்டிருந்தனர்.)

**அரசின் பயணத் திட்டத்துடன் களத்துக்கும் செல்வதில் உறுதி**

2005ஆம் ஆண்டில் விதர்பா நிலவரத்தை செய்தியாக்கிக் கொண்டிருந்த பத்திரிகையாளர்களாகிய நாங்கள் முன் வைத்த அழைப்பை, எங்களின் எதிர்பார்ப்பையும் தாண்டி வேகமாக ஏற்று, தேசிய விவசாயிகள் ஆணைய குழுவுடன் அங்கு வந்து சேர்ந்தார் பேராசிரியர் சுவாமிநாதன். விலாஸ்ராவ் தேஷ்முக் அரசாங்கம் எச்சரிக்கை அடைந்தது. அதிகாரிகளுடன் கலந்துரையாடல், விவ சாயக் கல்லூரி விழாக்கள் போன்ற தங்களின் வழி காட்டுதலுடன் கூடிய பயணத் திட்டத்தில் அவரை உள்ளடக்கக் கடுமையாக முயன்றது. ஆனால் பணி வான ஆளுமையான அவர், மகாராஷ்டிரா அரசாங்கம் விரும்பும் இடங்களுக்கு செல்வதாக ஒப்புக் கொண்ட அதே நேரம், நானும் ஜெய்தீப் ஹர்திகர் போன்ற சக பத்திரிகையாளர்களும் விடுத்த அழைப்பின்படி களத்துக்கும் செல்லவிருப்பதாகக் கூறி விட்டார். வார்தாவில் நாங்கள் அவரை ஷ்யாம்ராவ் கடாலே வின் வீட்டுக்கு அழைத்துச் சென்றோம். அவரின் இரு மகன்கள் தற்கொலை செய்து கொண்டிருந்தார்கள். பசியால் வாடி, மகன்களின் இழப்பால் துயருற்று, உடல் நலம் குன்றி சற்று முன்தான் ஷ்யாம்ராவும் இறந்திருந்த விஷயம் தெரியவந்தது. அவரின் இறப்பை சொல்லி, பயணத் திட்டத்தை மாற்ற அரசாங்கம் முயற்சித்தது. ஆனால் சுவாமிநாதன் இறுதி மரியாதை செலுத்த வேண்டுமெனச் சொல்லி, அங்கு சென்று அஞ்சலி செலுத்தவும் செய்தார்.

**கண்ணீர் விட்டார்... கவனித்துக் கேட்டார்**

அடுத்தடுத்துச் சென்ற வீடுகளில், தற்கொலை செய்தவர்களின் குடும்பத்தினர் சொல்வதை கேட்டு அவர் கண்ணீர் விட்டார். விவசாய நெருக்கடியில் இருந்த விவசாயிகள் வார்தாவின் வைஃபதில் ஒருங்கி ணைத்த கூட்டத்துக்கும் அவர் சென்றார். அக்கூட் டத்தை சந்தேகமே இன்றி நம் விஜய் ஜவாந்தியாதான் ஒருங்கிணைத்திருந்தார். விவசாயப் பிரச்சனைகள் சார்ந்து இயங்கும் முக்கியமான அறிஞர் அவர். ஒரு கட்டத்தில், கூட்டத்திலிருந்து ஒரு மூத்த விவசாயி கோ பத்துடன் எழுந்து, ஏன் அரசாங்கம் அவர்களை வெறுக் கிறது என கேள்வி கேட்டார். நாங்கள் சொல்வதை கேட்க வேண்டுமென்பதற்காக தீவிரவாதிகளாக வேண்டுமா என்றார். மனம் நொடிந்திருந்த பேராசிரியர் அவருடனும் அவரின் நண்பர்களுடனும் பொறுமையாகப் பேசினார்.

**விமர்சித்தவர்களையும் அழைத்துப் பேச வைத்தார்**

அப்போது சுவாமிநாதன் 80 வயதுகளில் இருந்தார். அவரிடம் இருந்த உறுதியும் நிதானமும் அமைதியும் என்னை ஆச்சரியப்படுத்தின. அவரின் பணி மற்றும் கருத்துகளை விமர்சித்தவர்களுடன் எவ்வளவு உண் மையாக அவர் பேசினார் என்பதையும் நாங்கள் கண்டோம். எத்தனை பொறுமையாக கவனித்தார், சமயங்களில் சில விமர்சனங்களுடன் கூட உடன்பட்டார் என்பதையும் நாங்கள் கண்டோம். அவரைத் தவிர, எனக்குத் தெரிந்த வேறு எவரும் தன்னை தனிப்பட்ட முறையில் விமர்சித்த விமர்சகர்களை அழைத்து தன்னுடைய பயிற்சி வகுப்புகளிலோ நிகழ்ச்சிகளிலோ நேரடியாக அந்த விமர்சனங்களை கூறச் சொன்னதில்லை.

**சுற்றுச்சுழல், மரபணு மாற்றப் பயிர்கள்**

தன்னுடைய பணியில் எடுத்த முக்கியமான முடிவு கள், தற்போது அடைந்திருக்கும் தோல்விகளையும் ஏற் படுத்தியிருக்கும் பாதிப்புகளையும் ஒப்புக்கொள்ளு தல் என்பது மிக முக்கியமான குணம். அது அவரிடம் இருந்தது. பசுமைப் புரட்சிக்கு பிறகு, ரசாயன உரங்க ளும் பூச்சிக் கொல்லிகளும் ஏற்படுத்திய பாதிப்பு, கற்பனை செய்திராதளவு கட்டுப்பாட்டை மீறிச் சென்றதைக் கண்டு அதிர்ச்சி கொண்டதாகக் கூறினார். கடந்த சில பத்தாண்டுகளில் அவர் சுற்றுச்சூழல் மீதும் நீராதார பாதுகாப்பு மீதும் அதிக அக்கறை செலுத்தினார். கடந்த சில வருடங்களில், வரம்பு மீறி பயன்படுத்தப்படு கிற பிடி மற்றும் மரபணு மாற்றப் பயிர்கள் குறித்தும் அவர் அதிகம் விமர்சித்திருக்கிறார். மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதனின் மறை வால், முன்னணி வேளாண் விஞ்ஞானியை மட்டுமின்றி, ஒரு சிறந்த மனதையும் நல்ல மனிதரையும் இந்தியா இழந்திருக்கிறது. ●

# ஜம்மு – காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து பறிப்பை நியாயப்படுத்திய உச்சநீதிமன்றத் தீர்ப்பு

**– தி இந்து தலையங்கம்**
**தமிழில் : கடலூர் சுகுமாரன்**

அரசியலமைப்புச் சட்டத்தின் 370ஆவது பிரிவின் கீழ் உறுதி செய்யப்பட்டிருந்த ஜம்மு-காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்தது குறித்த தீர்ப்பு ஒரு சாராருக்கு சார்பாக நீதித்துறை வழுவிவிட்டது என்பது மட்டுமல்ல; கூட் டாட்சி, ஜனநாயக விதிமுறைகள் மற்றும் சட்ட செயல் முறைகளின் புனிதத்தன்மை பற்றி இதுவரை அறி யப்பட்ட நீதிமன்றத்தின் நிலைப்பாடுகளிலிருந்து பின் வாங்குவதாக அமைந்துள்ளது. ஆகஸ்ட் 2019இல் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை நீக்கி அதன்மூலம் மற்ற மாநிலங்களைப் போல சிறப்பு அந்தஸ்து ஏதுமற்ற தாக மாற்றிய முரட்டுத்தனமான நடவடிக்கைக்கு, நீதி மன்றம் ஒப்புதல் அளித்தது, சந்தேகத்திற்கு இடமின்றி ஆளும் பாஜகவுக்கு அரசியல் ஊக்கத்தை அளித்துள் ளது. கூட்டாட்சிக் கொள்கையை தகர்ப்பதை சட்டப்பூர்வமாக்கும் இத்தீர்ப்பும், வரலாற்றுச் சூழலை கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறியதும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முக்கியத்துவத்தைக் குறைப்ப தாக உள்ளது.

ஒரு மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருக்கும் போது நாடாளுமன்றம் எந்தச் செயலை யும்- சட்டமியற்றுவதையும், மாற்ற முடியாத விளைவுக ளைக் கொண்ட எந்தச் செயலையும்- செய்ய முடியும் என்று கூறியிருப்பது கூட்டாட்சிக் கொள்கை மீதான மிகமிகக் கடுமையான தாக்குதலாகும். நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள இந்த ஆபத்தான நியாயப்படுத்தல் அரசியல் அமைப்பின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்வதாகும். மாநிலங்களின் உரிமைகள் மீது கடும் தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும். தேர்ந்தெடுக்கப் பட்ட ஓர் அரசாங்கம் இல்லாத நிலையில் பல விநோத மான - சரி செய்ய முடியாத செயல்களையும் அது அனுமதிக்கிறது. உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு, அரசாங்கத்தின் நிலைபாட்டை ஆமோதித்து மனுதாரர்களின் வாதங்களை நிராகரித்துள்ளது; இதனால் அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் ஆர வாரத்திலும் மகிழ்ச்சியிலும் உள்ளனர். ஏனென்றால் அந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஒரு பிரதிநிதியையும் ஈடுபடுத்தாமல், அதற்கான வாய்ப்பே தராமல், சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்வதற்கு ஏற்றவாறு குடியரசுத் தலைவர் ஆட்சியைத் திணித்து ஒன்றிய அரசு மோசமான முறையில் செயல்பட்ட பின்ன ணியில் தற்போதைய தீர்ப்பு வெளிவந்துள்ளது.

### நீண்ட கால 'லட்சியம்'

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்தை நீக்க வேண்டும் என்பது ஆளும் பாஜகவின் நீண்ட கால லட்சியம். இதனை நிறைவேற்ற அது ஒரு சிக்க லான செயல்முறையை மேற்கொண்டது. இரண்டு யூனி யன் பிரதேசமாக பிரித்து அம்மாநிலம் தரமிறக்கப் பட்டது. 5.8.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசியலமை ப்புச் சட்ட ஆணைஒன்றின் மூலம் இதைச்செய்தது.

ஆகஸ்ட் 5 அன்று பிறப்பிக்கப்பட்ட அந்த ஆணை யில், ஜம்மு- காஷ்மீர் மாநிலத்திற்கான அரசியல மைப்புச் சட்டத்தையே முழுமையாக மாற்றும் விதத் தில் சில வரையறைகளை வகுத்திருந்தது;

அதன்படி மாநில சட்டமன்றமே, மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்வதற்கான பரிந்துரையைச் செய்யலாம் என்று மாற்றியிருந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 370(3) இன்படி, ஜம்மு- காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்யும் அதிகாரம் அரசியல் நிர்ணய சபைக்குத் தான் உண்டு. ஆனால் தற்போது அரசியல் நிர்ணய சபை என ஒன்று இல்லை. எனவே அரசியல் நிர்ணய சபைக்கான அதிகாரத்தை மாநில சட்டமன்றமே நிறை வேற்றலாம் என ஆகஸ்ட் 5 ஆணையில் ஒன்றிய அரசு மாற்றம் செய்தது. எனினும் ஒன்றிய அரசின் ஆகஸ்ட் 5 ஆணையின் பகுதிகள் அரசியல் சட்ட விரோதமா னவை என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது; அரசியல் சட்டப் பிரிவு 370இல் திருத்தம் செய்வது அந்த பிரிவின் விதிகளின்படியே அனுமதிக்க முடியாதது என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே வேளையில் ஒரு விநோதமான திருப்பமாக 2019 ஆகஸ்ட் 6 அன்று ஒன்றிய அரசு வெளியிட்ட அறிவிக்கை யில், அரசியல் சட்டப் பிரிவு 370 செல்லத்தக்கது என்றும்; அதே நேரத்தில் எந்தவிதமான பரிந்துரையும் இல்லாமல் இதை செல்லத்தக்கதாக இல்லாமல் செய்வதற்கு குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. எந்தவித மான பரிந்துரையும் இல்லாமல் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்தை குடியரசுத் தலைவர் நீக்க முடியும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

1957இல் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்ட பிறகு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஜம்மு- காஷ்மீர் மாநி லத்தில் படிப்படியாக அமல்படுத்தப்பட்டு வருகிறது என்றும்; சிறப்பு அந்தஸ்து நீக்கமானது அத்தகைய ஒருங்கிணைந்த செயல்முறைகளின் உச்சக்கட்டமே தவிர வேறோன்றுமில்லை என்றும் நீதிமன்றம் நியாயப் படுத்தியுள்ளது. இந்த வாதத்தை ஏற்றுக் கொள்வதா கவே வைத்துக் கொண்டாலும் அரசியல் நிர்ணய சபை இன்று இல்லாத நிலையில், இந்தியாவின் இறை யாண்மைக்கு ஜம்மு- காஷ்மீர் இணங்கி வந்திருந்த நிலையிலும் கூட, எஞ்சியிருக்கும் தன்னாட்சி அம்சங்க ளை குழிதோண்டிப் புதைக்க விரும்பும் ஒன்றிய அரசாங் கத்தின் நோக்கத்திற்கு இருந்த சிறிதளவான தடையும் இன்று அகற்றப்பட்டுவிட்டது. இது கூட்டாட்சி மற்றும் ஜனநாயகத்தின் அனைத்து நியதிகளுக்கும் எதிரா னது. ஜம்மு- காஷ்மீர் எந்தவித தனித்த இறை யாண்மையும் கொண்டிருக்கவில்லை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தனி அரசியலமைப்பு, எஞ்சிய சட்ட அதிகாரங்கள், மாநிலம் குறித்த பிரச்சனை களில் நாடாளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டுமானால், அதற்கு தேவைப்படும் சட்டமன்றத்தின் சம்மதம்- இவைகளை ஜம்மு- காஷ்மீருக்கு வழங்கும் சட்டப் பிரிவு 370 ஒரு சமச்சீரற்ற கூட்டாட்சியை பிரதிநிதித் துவம் செய்கிறது என நீதிமன்றம் கூறியுள்ளது.

உண்மையில் மேற்கண்ட அதிகாரங்கள் மட்டும் அம்மாநிலத்திற்கு எவ்விதமான தனித்த இறை யாண்மையையும் அளிக்காது. ஆனால் அம்மாநி லத்திற்கு நிறைவேற்ற வேண்டிய வரலாற்றுக் கடமை கள் மற்றும் அரசியல் அமைப்பை உருவாக்கிய தலை வர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஆளும் கட்சியின் விருப்பப்படி காற்றில் பறக்கவிடப்பட்டுள் ளதை எப்படி நியாயப்படுத்த முடியும் என்பது புரிய வில்லை. காஷ்மீர் தலைவர்களுக்கும் ஒன்றிய அர சுக்கும் இடையேயான நிலைப்பாடு, உரையாடல், அது இந்தியாவுடன் இணைந்த சூழல் மற்றும் நிபந்தனை கள், முற்போக்குத்தன்மை நிறைந்த அரசியல் அமைப்பு வழிமுறைகள்

ஆகியவற்றை வழங்கி, இணைப்பு உடன்பாடு மற்றும் அதன் செயல்முறை கள் மூலம் இந்தியாவுடனான காஷ்மீரின் ஒருங்கிணைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. பன்னெடுங்காலமாக இது நடை பெற்று வந்துள்ளது என்பது வசதியாக மறக்கப் பட்டுள்ளது.

**நீதித்துறையின் தோல்வி**

மேலும், ஜம்மு- காஷ்மீரை இரண்டு யூனியன் பிர தேசங்களாக மறுசீரமைக்க அரசியலமைப்புச்சட்டம் அனும திக்கிறதா என்பது குறித்த தீர்ப்பை நீதிமன்றம் வழங்கத் தவறியுள்ளது. நீதித்துறையின் தோல்விக்கு இது ஒரு வியக்க வைக்கும் எடுத்துக்காட்டு. ஒரு மாநிலத்தை தரமிறக்க, அரசியலமைப்பின் மூன்றாவது பிரிவை முதன் முறையாக பயன்படுத்தியது குறித்த கேள்விக்கு தீர்ப்பளிக்க வேண்டாம் என நீதிமன்றம் முடிவு செய்தது அதிர்ச்சி அளிப்பதாகும்.

ஜம்மு- காஷ்மீர் மாநில அந்தஸ்து மீட்டெடுக் கப்படும் என அரசாங்க கூடுதல் தலைமை வழக்கறிஞர் (சொலி சிட்டர் ஜெனரல்) உறுதியளித்தார் என்பது தான் ஒரே காரணம். பரிகாரம் மேற்கொள்வதாகச் சொல்லப் படும் ஓர் உத்தரவாதம் எந்த ஒரு நடவடிக்கையையும் செல்லத்தக்கதாக, மாற்ற முடியுமா? அதே நேரத்தில், லடாக்கை தனி யூனியன் பிரதேசமாக உருவாக்கியதை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. எந்த ஒரு மாநிலத்தின் சில பகுதிகளை பிரித்தெடுத்து புதிய யூனியன் பிரதேசம் உருவாக்கவும், அது குறித்து பரிசீலிக்கவும் இந்தத்தீர்ப்பு வழிவகுக்கிறது. அதேபோல மாநில அரசு மற்றும் அதன் சட்டமன்றத்தின் சார்பாக தாங்களே முடிவெடுக்கும் குடியரசுத் தலைவரின் அதீத அதிகாரத்துக்கோ நாடாளுமன்றத் தின் தகுதிக்கோ எந்த வரம்பும் இல்லை என்ற நீதி மன்ற நிலைபாடு சமமான ஆபத்து நிறைந்தது. குறிப் பாக மாநிலச் சட்டப் பேரவைகளில் சட்டம் இயற்ற முடியாத அதிகாரங்கள் பற்றிய குறிப்பு, மாநிலங்க ளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அச்சு றுத்தலை ஏற்படுத்துகிறது. இத்தீர்ப்பின் பின்னணியில் ஒரு மாநிலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஒருபோதும் செய்யாத அசாதாரண நடவடிக்கைகளைத் தனது சொந்த நாடாளுமன்ற பெரும்பான்மை மூலம் நிறைவேற்றும் வகையில், மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி யைதானே உருவாக்கும் அரசாங்கங்கள் அமலாக்கலாம்.

**சில எடுத்துக்காட்டுகள்:**

அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு ஒப்பு தல், மாநிலங்களுக்கு இடையே ஒப்பந்தங்களை ரத்து செய்தல், முக்கிய வழக்குகளை திரும்பப் பெறுதல், பெரிய அளவில் கொள்கை மாற்றங்களைக் கொண்டு வருதல். குடியரசுத்தலைவர் ஆட்சியின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் மாநில நலன்களை சேதப்படுத்தினால், பின் நாட்களில் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்கள் மூலம் மீட்டெடுக்கப்படலாம் என்ற கருத்து மட்டும் சற்று ஆறுதல் அளிக்கிறது. இந்தத் தீர்ப்பு ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தின் மீதான இந்தியாவின் இறையாண்மையை சரியான முறையில் நிலைநிறுத்துவதாகத் தோன்றினாலும், அதிகார அமைப்புகளின் வரம்புகளை வலுவிழக்கச் செய்கிறது. அச்சமடையும் அளவிற்கு கூட்டாட்சியை மாண்பி ழக்கச் செய்கிறது. ஜனநாயக செயல்முறைகளைச் சிதைக்கிறது. ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# மாநில செயற்குழுக் கூட்டம் சென்னை 6.1.2024

















# ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக்குழு கூட்டம் சென்னை 7.1.2024






Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.01.2024

# AISGEF தேசிய கவுன்சில் கூட்டம்

## (கொல்கத்தா 2023 டிசம்பர் 28,29,30)





























Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com